www.padippakam.com

கடல் : 2 ● அலை : 7

நன்கொடை ரூ. 5/-

# தமிழ்த் தேசம்

திருவள்ளுவர் ஆண்டு 2030 ● நளி ● கி.பி. 1999 ● நவம்பர்

ஆசிரியர் : தியாகு

## சென்னைச் சிறையில் செந்நீர்ப் பெருக்கு!

## தோழர் பெ. மணியரசனுக்கு விடை...



# சிறைத் தியாகிகளுக்கு வீர வணக்கம்!

தமிழ் தமிழர் இயக்கத் திங்களேடு ● தனிச்சுற்றுக்கு மட்டும்

படிப்பகம்

www.padippakam.com

# சோனியா காந்திக்கு நன்றி!



இராசீவ் காந்தி
கொலை வழக்கில்
தண்டிக்கப்பட்டு
சாக்கொட்டடியில் இருந்து
வரும் நளினிக்கு
மரண தண்டனையைக்
குறைக்கும்படி
ராசீவின் துணைவியாரும்
அனைத்திந்திய காங்கிரஸ்
தலைவருமான திருவாட்டி
சோனியா காந்தி அவர்களே
இந்தியக் குடியரசுத்
தலைவருக்கு வேண்டுகோள் விடுத்திருப்பதாகச் செய்தி வந்துள்ளது. அது மட்டுமல்லாமல் இந்த வழக்கில் மரண தண்டனை பெற்றுள்ள எவர் ஒருவரையும் தூக்கிலிடுவதை தானும் மகன் ராகுல், மகள் பிரியங்காவும் விரும்பவில்லை என்றும் அவர் தெரிவுபடுத்தியுள்ளார்.

பரந்த உள்ளத்துடனும் தெளிந்த மாந்தநேயப் பார்வையுடனும் நீங்கள் எடுத்துள்ள இந்தக் கருணை தோய்ந்த நிலைப்பாட்டிற்காக, சோனியா காந்தி அவர்களே, உங்களை தமிழ்த் தேசம் உளமாரப் பாராட்டுகிறது. மிக்க நன்றி!

*சென்னை*
*1999 நவம்பர் 27*

**தியாகு,**
பொதுச் செயலாளர், தமிழ் தமிழர் இயக்கம்,
ஆசிரியர் : தமிழ்த் தேசம்.

படிப்பகம்

www.padippakam.com


# தமிழ்த் தேசம்

திருவள்ளுவர் ஆண்டு 2030 நளி
கி.பி. 1999 நவம்பர்
கடல் : 2
அலை : 7

எல்லாத் தொடர்புகளுக்கும் :
தமிழ்த் தேசம்,
அறை எண் 3, முதல் மாடி,
242, என்.எஸ். கிருஷ்ணன் சாலை (ஆற்காடு சாலை),
வடபழனி, சென்னை - 600 026.

ஆசிரியர் : தியாகு • துணை ஆசிரியர் : தாம்பரம் தமிழ்மணி • வெளியிடுபவர் : ச. நாத்திக நந்தனார்


# தமிழீழ மாவீரர் நாள்



தமிழீழ விடுதலைப் போர் பாய்ச்சல் வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கும் தருணத்தில் இவ்வாண்டு மாவீரர் நாள் வந்துள்ளது. ஈழ மண்ணில் போரிட்டு வீழ்ந்த பல்லாயிரம் மாவீரர்களுக்கும் தமிழ் தமிழர் இயக்கம் தன் வீர வணக்கத்தை உரித்தாக்கிக் கொள்கிறது. வீழ்ந்த விதைகள் முளைத்து வளர்ந்து விளைச்சலாகிக் கொண்டிருப்பதை 'மூன்றாம் ஓயாத அலைகள்' மெய்ப்பித்துள்ளன. மென்மேலும் வெற்றிகளைக் குவித்து வெகு விரைவில் தமிழீழத் தாயகத்தை மீட்டிட தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழீழ மக்களுக்கும், அவர்களின் தேசியத் தலைவர் வே. பிரபாகரனுக்கும் தமிழ் தமிழர் இயக்கம் சார்பிலும் தமிழ்த் தேசம் ஏட்டின் சார்பிலும் புரட்சி வாழ்த்துகளைக் கூறிக் கொள்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

# இந்துத்துவம்

## -- ஒரு பன்முக ஆய்வு

(இந்தத் தலைப்பில் பேராசிரியர் அ. மார்க்ஸ் எழுதியிருக்கும் நூலிலிருந்து கருத்துக்குரிய சில எடுகோள்களை இங்கே தொகுத்தளிக்கிறோம்)

**"அவர்கள் தங்களின் சொந்த மதத்தையே பின்பற்றிக் கொள்ளட்டும். மக்கா அவர்களின் புனித நகரமாகவே இருக்கட்டும். ஆனால் இந்தியா அதைவிடப் புனிதம் என்பதை அவர்கள் உணர வேண்டும்."**

-- இப்படிச் சொன்னவர் வேறு யாருமல்ல, இப்போதைய பிரதமர் கண்ணியத்துக்குரிய அடல் பிகாரி வாசுபேயிதான்.

**"இந்த நாட்டில் எத்தனை போலீஸ் ஸ்டேஷன்கள் இருந்தாலும், எத்தனை ஆயிரம் போலீஸ்காரர்கள் இருந்தாலும், இந்துக்களைப் பகைத்துக் கொண்டு இசுலாமியர் பாதுகாப்புடன் வாழ முடியாது. அவர்கள் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இந்துக்களின் கையில்தான் உள்ளது. இந்துக்களோடு நல்ல உறவை வைத்துக் கொள்வதில்தான் உள்ளது."**

-- இப்படிச் சொல்லியிருப்பவர் பாரதீய சனதா கட்சியின் வீரப் பெண்ணாகக் காட்டப்பெறும் உமாபாரதி.

இண்டர்நெட்டில் பாரதீய சனதா கட்சி தொடங்கியுள்ள 'வெப்சைட்'டில் வாசுபேயி எழுதிய ஒரு கட்டுரை இடம் பெற்றுள்ளது. 1995 மே 7 ஆர்கனைசர் (ஆர்.எஸ்.எஸ். பத்திரிகை) இதழில் அவர் எழுதிய கட்டுரைதான் அது. கட்டுரைத் தலைப்பு என்ன தெரியுமா?

Sangh My Soul என்பதே. இதன் பொருள் என்ன தெரியுமா? 'ஆர்.எஸ்.எஸ். எனது ஆன்மா'

**"ராமரா, பாபரா? ராணா பிரதாப்பா, அக்பரா? சிவாஜியா, அவுரங்கசீப்பா? நீங்கள் யாருடைய பிள்ளை? பதில் சொல்லாதவருக்கு இங்கே இடமில்லை."**

-- இப்படிச் சொல்லியிருப்பவர் பாரதீய சனதா கட்சியின் இளந்தலைவர்களின் முன்னணித் தலைவராக விளங்கும் பிரமோத் மகாஜன். இவரைத்தான் இப்போது தில்லி அரசில் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சராக்கியிருக்கிறார்கள்.

**"இந்தியா போன்ற ஏழை நாடுகளுக்கு வாக்குரிமை என்பது தேவையற்ற ஆடம்பரம். சனநாயகத்தின் ஐந்து தூண்கள் என்று சொல்லப்படும் நிர்வாகம், நாடாளுமன்றம், குடியரசுத் தலைவர், நீதிமன்றம், தணிக்கை அதிகாரம் போன்றவை இந்தியச் சூழலுக்குத் தேவையேயில்லை"**

-- இப்படிச் சொல்லியிருப்பது ஆர்.எஸ்.எஸ். ஏடாகிய பாஞ்ச ஜன்யம் (1992 டிசம்பர் 6).

**"பழைய ஆட்சிகள் தரும சாத்திரப்படி நடந்தன. எந்த அரசனும் மனு ஸ்மிருதியை மாற்ற முனையவில்லை... எல்லோருக்கும் வாக்குரிமை என்பது தேவையில்லை. சொத்து, கல்வி, அரசியல் நீரோட்டங்களைப் புரிந்து கொள்ளும் திறமை, தரும சாஸ்திரத் தேர்ச்சி ஆகியவற்றைக் கொண்டவர்கள் மட்டுமே வாக்களித்தால் போதும்."**

-- இப்படித் திருவாய் மலர்ந்திருப்பவர் காஞ்சி நடு சங்கராச்சாரியார் (பகவன்ஸ் ஜர்னல், 1989 நவ. 30).

**"தாழ்ந்த சாதியினருக்குக் கோயில்கள் திறந்து விடப்படலாம்; பூணூல் கூட அவர்கள் அணிந்து கொள்ளலாம். ஆனால் அதே சமயத்தில் மகர்கள் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட கிராமப் பணிகளைச் செய்வதை மறுக்கக் கூடாது."**

-- இப்படிச் சொன்னவர் வீரசவர்க்கர். 'மகர்' என்பது தாழ்த்தப்பட்ட சாதிகளுள் ஒன்று. இந்தச் சாதியில்தான் அண்ணல் அம்பேத்கர் பிறந்தார். மகர் என்பதிலிருந்துதான் மகராஷ்டிரம் என்ற பெயரே வந்தது என்பார்கள்.

*(இந்துத்தவத்தின் சுய ரூபத்தைத் தக்க சான்றுகளுடன் வெளிப்படுத்தும் நூலினை ஆக்கித் தந்த பேராசிரியர் அ. மார்க்ஸ் போற்றுதலுக்கும் நன்றிக்கும் உரியவராகிறார்.)* ❑

-- க.வே.

## உடைந்தது போப் வழக்கு!

நீலமலை மாவட்டம், கூடலூர் வட்டம், உப்பட்டி பகுதியில் 1992இல் புரட்சிகர இளைஞர் முன்னணித் தோழர்கள் செல்வராசு, கிட்டு, திலகரத்தினம் மூவர் மீதும் தேவாலா காவல் துறை ஒரு வழக்கைப் புனைந்தது. "கேடயம், மனஓசை, புதிய ஜனநாயகம் ஏடுகளைச் சப்தம் போட்டுப் படித்து மதவெறியைத் தூண்டினார்கள்" என்பதுதான் குற்றச்சாட்டு. தேவாலா காவல் துறை அந்தத் தோழர்களை தளைப்படுத்தி, மிருகத்தனமாக அடித்து நொறுக்கி, உடைமைகளை சேதப்படுத்தியும் திருடியும் சென்றது. ஏழாண்டுகளாக இவ்வழக்கை இழுத்தடித்தது. சென்ற நவம்பர் 2ஆம் நாள் நீலமலை மாவட்ட நீதிமன்றம் இவ்வழக்கைத் தள்ளுபடி செய்து தோழர்கள் மூவரையும் விடுதலை செய்தது.



படிப்பகம்

www.padippakam.com

# சென்னைச் சிறையில் செந்நீர்ப் பெருக்கு...



# காவல் படையின் கொலை வெறித் தாண்டவம்

கூண்டுப் பறவைகளைக் குத்திக் கிழிக்கும் கொடுமை மீண்டும் ஒரு முறை நிகழ்ந்துள்ளது.

சென்ற நவம்பர் 17ஆம் நாள் சென்னை நடுவண் சிறையில் நடந்த நிகழ்ச்சிகள் குறித்து ஏடுகளில் பலவாறான செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. இந்தச் செய்திகள் யாவும் பொய்யும் மெய்யும் கலந்தவையே என்பது சிறை நிலைமைகளை அறிந்தவர்களுக்கு நன்கு தெரியும்.

பரபரப்பான படங்களுடன் வரும் விறுவிறுப்பான செய்திக் 'கட்டு'ரைகள், திகில் கதைகள்... இவை ஒரு பக்கம், சிறை அதிகாரிகளும் காவல் துறை அதிகாரிகளும் தரும் செய்திகளை அப்படியே விழுங்கி வாந்தி எடுக்கும் அமைச்சர் அறிக்கைகள் மறு பக்கம்...

இந்நிலையில் சென்னைச் சிறைக் கலவரம் குறித்து குடியியல் உரிமைகளுக்கான மக்கள் ஒன்றியம் (பியூசிஎல்) விசாரித்து அளித்துள்ள அறிக்கை உண்மைகளை

**தியாகு**

வெளிச்சம் போட்டுக் காட்டுவதாய் உள்ளது. பியூசிஎல் அனைத்திந்திய துணைத் தலைவர் திரு கே. மனோகரன் தலைமையிலான உண்மையறியும் குழு கடும் இடர்ப்பாடு களுக்கிடையே செயல்பட்டு இந்த அறிக்கையைத் தந்துள்ளது.

இந்த அறிக்கையில் கண்டுள்ளவாறு, உண்மையில் நடந்தது என்னவென்றால்: கடந்த ஜூலை மாதம் சென்னை நடுவண் சிறையில் கவுஸ் என்ற கைதியை அதிகாரிகள் அடித்துத் துன்புறுத்தி சாகடித்து விட்டார்கள். ஆனால் இந்தச் சாவு குறித்து முறையான விசாரணை ஏதும் நடத்தப்படாமலே கொலையைத் தற்கொலை என்று கணக்குக் காட்டிவிட்டார்கள். சிறைப்படுத்தப்பட்டோர் இதனால் கொதிப்புற்றனர்.

பாக்ஸர் வடிவேலு என்ற கைதியை 'குவாரண்டைன்' எனப்படும் தனிமைச் சிறையில் கொண்டுபோய் வைத்து கடந்த 12 முதல் 15ஆம் நாள் வரை அடித்து நொறுக்கித் துன்புறுத்தினார்கள். அதே போல் 16ஆம் நாள் இரவு வேளச்சேரி பாபு, மைலாப்பூர் நாகராஜ் ஆகிய



படிப்பகம்

www.padippakam.com

கைதிகளையும் கொண்டுபோய் வைத்து அடித்து நொறுக்கினார்கள். அவர்களைத் துன்புறுத்தியதில் முன்னுக்கு நின்று முக்கியப் பங்காற்றியவர் துணைச் சிறை அலுவலர் (டெபுட்டி ஜெயிலர்) ஜெயக்குமார்.

இந்த நிலையில்தான் நவம்பர் 17 அதிகாலையில் (லாக்கப் திறப்பதற்கு முன்பே) பாக்ஸர் வடிவேலு சென்னை பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுகிறார். மருத்துவமனையை அடையும்போதே அவர் உடலில் உயிர் இல்லை. அன்று காலை வடிவேலுவின் மரணச் செய்தி சிறைக் கைதிகளை வந்தடைகிறது. வடிவேலு எப்படிச் செத்தார் என்பதற்குச் சிறை அதிகாரிகள் விளக்கம் தர வேண்டுமென அவர்கள் கோருகிறார்கள். சிறை அதிகாரிகள் தந்த விளக்கம் ஏற்கும்படியாக இல்லாததால் கோபாவேசத்துடன் சிறையலுவலர் ஜெயக்குமார் மீது பாய முனைகிறார்கள். அந்தச் சிறை அதிகாரியோ நிலைமையின் ஆபத்தை உணராமல் 'சார்ஜ்' எனக் குரல் கொடுக்கிறார். உடனே ஜெயக்குமாரும் புதிதாய் வேலைக்கு வந்த சிறைக் காவலர்கள் 26 பேரும் சேர்ந்து கைதிகள் மீது பாய்ந்து அவர்களைத் தடிகளாலும் கம்பிகளாலும் தாக்குகிறார்கள்.

கைதிகள் கலைந்து போய் மறுபடியும் ஒன்று சேர்ந்து சிறைக் கட்டடங்களின் மீதும் கூரைகள் மீதும் மரங்களின் மீதும் ஏறி நின்று முழக்கம் எழுப்புகிறார்கள். இது சிறையில் ஒரு சாதாரணப் போராட்ட வடிவமே ஆகும். இப்படிப் பல சிறைகளிலும் பல சந்தர்ப்பங்களிலும் நிகழ்ந்துள்ளது.

தரையில் நின்று ஆர்ப்பாட்டம் செய்ய அனுமதிக்கப் படாத நிலையில் மரத்திலேறி ஆர்ப்பாட்டம் செய்வது ஒரு போராட்ட வழியே தவிர வேறல்ல. உள்ளே நடப்பது வெளியே தெரிய வேண்டும் என்ற நோக்கமும் உண்டு.


போராடிய கைதிகளில் சிலர் கையில் கிடைத்தவற்றை எடுத்து சிறை அதிகாரிகள் மீது வீச முற்படுகிறார்கள். போராட்டம் ஒரு சிறைக் கலகமாக மாறுகிறது. துணைச் சிறை அலுவலர் ஜெயக்குமார் கைதிகளால் கொலை செய்யப்படுகிறார்.

அவர் எவ்வாறு கொல்லப்பட்டார்? உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டாரா? தீயில் சிக்கி உயிரிழந்தாரா? அல்லது வேறு வகையில் கொல்லப்பட்டாரா? இந்த வினாக்களுக் கெல்லாம் நீதி விசாரணைதான் விடை காண வேண்டும்.

ஜெயக்குமாரின் சாவு வருத்தத்திற்குரியதே. ஆனால் அவரைப் பற்றி வரக் கூடிய செய்திகளையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் அவர் தன் சாவை தானே தேடிக் கொண்டது போல் உள்ளது. 'தப்பு' செய்யும் கைதிகளை ஜெயக்குமார் கடுமையாக அடிப்பார் என்று எல்லாரும் சொல்கிறார்கள். எந்தச் சட்டப்படி அடிப்பார் என்பதை மட்டும் யாரும் சொல்லவில்லை. ஏனென்றால் கைதி செய்த தப்பு எதுவானாலும் அவரை அடிப்பதற்கும் துன்புறுத்து வதற்கும் எந்தச் சிறையதிகாரியையும் சட்டம் அனுமதிக்க வில்லை.

ஜெயக்குமார் நேர்மையான அதிகாரி என்று படம் காட்ட முயற்சி செய்கிறார்கள். இதையும் நம்புவதற்கில்லை. சிறையில் துணைச் சிறை அலுவலர்தான் உணவுப் பங்கீட்டுக்கு (ரேஷன்) பொறுப்பாவார். சென்னைச் சிறையில் கைதிகளுக்குப் போய்ச் சேர வேண்டிய உணவு சரியான அளவிலும் தரத்திலும் போய்ச் சேரவில்லை என்று எல்லாச் செய்திகளும் சொல்கின்றன. இது உண்மை யானால் ஜெயக்குமார்தான் முதல் பொறுப்பாளி -- முதல் குற்றவாளி. ஜெயக்கும்ார் மீது கைதிகள் கொண்டிருந்த கடுமையான வெறுப்பிற்கு அவரது உணவுத் திருட்டும் ஒரு காரணமாய் இருக்கக் கூடும்.

கைதிகள் கொலைவெறி பிடித்து ஜெயக்குமாரைக் கொலை செய்து விட்டது போல் காட்ட முயல்கிறார்கள். இது உண்மையில்லை. முதலில் கொலை செய்யப்பட்டவர் பாக்ஸர் வடிவேலுதானே தவிர ஜெயக்குமார் அல்ல. பாக்ஸர் வடிவேலு கொல்லப்பட்டது வினை என்றால்





படிப்பகம்

www.padippakam.com

ஜெயக்குமார் கொல்லப்பட்டது எதிர்வினையே ஆகும். கைதிகளின் வன்முறையையோ ஜெயக்குமார் கொல்லப் பட்டதையோ நியாயப்படுத்துவதற்காக அல்ல; பாக்ஸர் வடிவேலு கொல்லப்பட்டதையும் சிறைக் கைதிகள் மீது நடத்தப்பட்ட கொடிய வன்முறையையும் நியாயப் படுத்தும் முயற்சியை மறுதலிப்பதற்காகவே இதைச் சொல்கிறோம்.

சிறைக் கைதிகளின் கலகத்தை சிறைக் கண்காணிப் பாளரே சிறைக் காவலர்களின் துணை கொண்டு அடக்கி விட்டார் என்ற உண்மையை காயமுற்று மருத்துவ மனையில் இருக்கும் கைதிகள் பியூசிஎல் குழுவிடம் தெளிவுபடுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

எல்லாம் ஓய்ந்து கைதிகள் ஏறத்தாழ சரணடைந்து விட்ட நிலையில்தான் போலீஸ் அதிரடிப்படை வந்து சேர்கிறது. இந்தப் படையினர் கண்ணீர்ப் புகை வீசியும் தடியடிப் பிரயோகம் செய்தும் கைதிகளை விரட்டி விரட்டி அடிக்கிறார்கள். தேவையே இல்லாமல் துப்பாக்கியால் சுடுகிறார்கள். அத்தோடு ஓய்கிறார்களா என்றால் இல்லை. கொட்டடிகளுக்குள் ஓடிப் பதுங்கி விட்ட கைதிகளை வெளியே இழுத்து வந்து அடிக்கிறார்கள். சிறைக்கு உள்ளே இருந்தும் சுடுகிறார்கள். வெளியே பூங்கா நகர் தொடர்வண்டி நிலையத்தின் மேம்பாலத்திலிருந்தும் சுடுகிறார்கள்.

ஜெயபால் என்ற கைதியை மிக அருகில் நின்று சுட்டுக் கொலை செய்திருக்கிறார்கள். அவர் ஊனமுற்றவர், ஒரு கால் விளங்காதவர், அவரால் எந்தக் கலகமும் செய்திருக்க முடியாது. காவல் துறை அதிரடிப் படையின் துப்பாக்கிச் சூட்டில் குண்டுக் காயமடைந்த மற்றொருவரும் கால் ஊனமுற்றவரே. அவர் பெயர் சின்னப்பையன். கள்ளச் சாராயம் விற்றதாகச் சொல்லி 'குண்டர் சட்டத்தில்' சிறை வைக்கப்பட்டவர். கலகம் நடந்த போது அவர் கொட்டடியை விட்டு வெளியே வரவேயில்லை. காவல் படை தேடிச் சென்று அவரைக் கொட்டடிக்குள் வைத்தே அடித்து நொறுக்கியது, நெற்றியிலும் வலது கையிலும் இடது கணுக்காலிலும் காயமுற்றவரை வெளியே இழுத்து வந்த போது துப்பாக்கித் தோட்டா அவரது தலையை உரசிச் சென்றதாம்.

துப்பாக்கிச் சூடு உள்ளிட்ட காவல் படைத் தாக்குதலில் குறைந்தது பத்துக் கைதிகள் உயிரிழந்திருக்கிறார்கள். கலகத்தை ஒடுக்குவதன் பெயரால் கைதிகள் மீது கொடிய அடக்குமுறையை ஏவியதோடு நில்லாமல், குறிப்பிட்ட சில கைதிகளைப் பொறுக்கி எடுத்தும் அடித்துள்ளார்கள். இவ்விதம் கடுமையாகத் தாக்கப்பட்டவர்களில் ஒருவர் வெள்ளை ரவி. அவரும் அவரைப் போன்றவர்களும் ஜெயக்குமார் கொல்லப்பட்டதிலும், ஏனைய வன்முறை நிகழ்ச்சிகளிலும் என்ன பங்கு வகித்திருந்தாலும் அவர் களை விசாரித்துத் தீர்ப்பு வழங்க வேண்டியது நீதித்துறை தானே தவிர காவல் துறையோ சிறைத் துறையோ அல்ல.

வெள்ளை ரவி போன்றவர்களைப் பற்றி காவல் துறையே ஒரு பயங்கரப் படிமத்தை உருவாக்க முயல்கிறது. குண்டர்கள், ரௌடிகள் என்றெல்லாம் முத்திரை குத்திக் காட்டி விட்டால் பிறகு அவர்களை என்ன செய்தாலும் கேட்க நாதியிருக்காது என்று காவல்துறை மனப்பால் குடிக்கிறது. காவல் நிலையத்தில் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுகிற பெண்களை ஒழுக்கமற்றவர்கள் என்று முத்திரை குத்திக் காட்டும் முயற்சியைப் போன்றதே இதுவும். சிதம்பரம் பத்மினியை எப்படி மறக்க முடியும்?

> சிறைக் கைதிகள் மீது கொலை வெறித் தாண்டவம் ஆடிய காவல் துறையினர் அத்துடன் நிறைவடையாமல் சிறைக் கைதிகளின் குடும்பத் தினர் மீதும் பாய்ந்து குதறியதை என்னென்பது? சிறைப்பட்ட தங்கள் அன்பிற்குரியவர்கள் செத்தார் களோ பிழைத்தார்களோ என்ற கவலையுடன் அவர்களைப் பார்க்க வந்த குடும்பத்தினரைச் சிறை வாயிலுக்கு வெளியே காவல்துறை விரட்டி விரட்டி அடித்தது. கொடுங்காயமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட கைதிகளைப் பார்க்க வந்த குடும்பத்தினரையும் காக்கிப் படை விட்டு வைக்கவில்லை.

பாக்ஸர் வடிவேலு, வெள்ளை ரவி போன்றவர்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டார்கள் என்பதுதானே குற்றச்சாட்டு? காவல் துறை மற்றும் சிறைத் துறை அதிகாரிகள் அதே குற்றத்தைச் செய்யும் போது அவர்களையும் குண்டர்களாகவும் ரௌடிகளாகவும்தானே கருத வேண்டியிருக்கும்! சட்டம் காப்பதற்கென்று மக்கள் வரிப் பணத்தில் சம்பளம் வாங்கிக் கொண்டே சட்டத்தை மீறுவதால் இந்தக் காக்கிச் சட்டை ரௌடிகள் கைலி கட்டிய ரௌடிகளை விடவும் மோசமானவர்களே!

பாக்ஸர் வடிவேலு கொலையால் ஆத்திரமுற்ற கைதிகள் சிறை அதிகாரி ஜெயக்குமாரைக் கொலை செய்திருக்கலாம், ஜெயக்குமார் கொலையால் ஆத்திரமுற்ற காவல் படை பத்துக்கும் மேற்பட்ட கைதிகளைக் கொலை செய்து நூற்றுக்கு மேற்பட்டவர்களைக் காயப்படுத்தி இருக்கலாம் என்ற நிகழ்ச்சி வரிசை வெளிப்படுகிறது. கைதிகளின் கலகத்துக்குப் பதிலடியாகக் காவல் படையும் கலகம் செய்தது என்றாகிறது. இங்கே கைதிகளுக்கும் காவலர் களுக்கும் என்ன வேறுபாடு? சட்டத்தை மீறி சமூக விரோத மாகச் செயல்பட்டு சிறைப்பட்ட குற்றவாளிகளுக்கும் 'சட்டத்தையும் சமூக அமைதியையம் காப்பதற்காக சீருடை அணிந்த ஒழுங்குக் கட்டுப்பாடான' காவல் படைக்கும் என்ன வேறுபாடு?

கொலையை யார் செய்தாலும் கொலைதான்! பார்க்கப் போனால் காவலரைக் கைதி கொன்றதை விடவும் கைதியைக் காவலர் கொன்றதுதான் மோசமான கொலைக் குற்றமாகக் கருதப்பட வேண்டும். கைதி அடைபட்டிருப் பவர், காவலர் அடைத்து வைத்திருப்பவர் என்பதை மறக்கலாகாது.

சிறையில் காவல் படை நடத்திய கொலை வெறித் தாக்குதலை நியாயப்படுத்தித் தமிழக அரசின் சிறைத் துறை அமைச்சர் அளித்துள்ள அறிக்கைகள் முழுப் பூசணிக் காயைச் சோற்றில் மறைக்கும் முயற்சிகளே தவிர வேறல்ல.



படிப்பகம்

www.padippakam.com



திரு ஆலடி அருணா அதிகாரிகள் சொல்வதையெல்லாம் நம்பிக் கொண்டிருக்கிறார் என்பதாக இருக்கலாம். அல்லது தெரிந்தே புளுகிக் கொண்டிருக்கிறார் என்பதாக இருக்கலாம். இரண்டில் எது உண்மையானாலும், அருணா ஏமாளி என்றாலும் சரி, ஏமாற்றுப் பேர்வழி என்றாலும் சரி, மறைந்த சிட்டிபாபு அவரை மன்னிக்க மாட்டார்.

அவசர நிலைக் காலத்தில் மிசாக் கைதிகளாக இதே சென்னைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சிட்டிபாபுவும் நீலநாராயணனும் ஆர்காடு வீராசாமியும் மு.க. ஸ்டாலினும் மற்றவர்களும் எவ்வளவு மோசமாக நடத்தப்பட்டார்கள், எவ்வாறெல்லாம் துன்புறுத்தப்பட்டார்கள் என்பதை இன்று நாம் அறிவோம். ஆனால் அன்று....? யாரையும் அடிக்க வில்லை, மோசமாக நடத்தவில்லை என்றுதான் அதிகாரி களும் அரசினரும் அறிக்கை அளித்துக் கொண்டிருந்தார் கள். இப்போதும் அதே அதிகாரிகள்தான் அல்லது அவர்களின் வழிவந்தவர்கள்தான் என்பதை அமைச்சர் மறந்தாலும் முதலமைச்சராவது மறக்காமல் இருக்க வேண்டும்.

சிறைக் கலகத்தில் உயிரிழந்த துணைச் சிறை அலுவலர் ஜெயக்குமாரின் குடும்பத்துக்கு 8 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று முதல்வர் அறிவித்துள் ளார். அதேபோது, இறந்த சிறைக் கைதிகளின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 1.5 இலட்சம் உதவித் தொகை வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார். ஏன் இந்தப் பாகுபாடு? விலையற்ற உயிருக்கு விலை வைக்கும்போது சிறை அதிகாரியையும் சிறைக் கைதியையும் வேறுபடுத்திப் பார்ப்பது நியாயமில்லை. "எல்லாரும் ஓர் நிறை" என்பது வாய்ப்பேச்சுக்கு மட்டும்தானா? அல்லது எல்லாரும் என்பது சிறைக் கைதிகள் தவிர மற்ற எல்லாருமா? முதல்வர்தான் விடையிறுக்க வேண்டும். ஜெயக்குமார் குடும்பத்திற்குத் தரும் அதே 8 லட்சத்தை பாக்ஸர் வடிவேலு உட்பட இறந்து போன ஒவ்வொரு கைதியின் குடும்பத்துக் கும் தருவதற்கு ஆணையிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மிசாக் கைதியாக அடைபட்டிருந்த மகன் ஸ்டாலினை சிறையில் மனுப் பார்க்க தந்தை மு.க. சென்ற போது என்ன நடந்தது? சிறைக்குள் நடந்ததை அப்பாவிடம் சொல்லக் கூடாது என்று மகனை மிரட்டி வைத்திருந்தார்கள். நேர்காணலில் தந்தை மகனைக் கேட்டார்: "உன்னை அடித்தார்களா?"

அழுது கொண்டே மகன் சொன்னார்: "இல்லை... என்னை அடிக்கவில்லை."

தந்தைக்குத் தெரியும் இது பொய் என்று. காட்டிக் கொடுத்தது அழுகை மட்டுமன்று. என்றும் அரைக்கை சட்டை அணிகின்ற பிள்ளை அன்று முழுக்கை சட்டை அணிந்திருந்தார். இல்லை, அவரை அணிய வைத்திருந்தார் கள் -- முழங்கையலிருந்த கொடுங் காயத்தை மறைப்பதற் காக!

சிறைத் துறை மற்றும் காவல் துறை அதிகாரிகள் எத்துணை மோசடிப் பேர்வழிகளாய் இருக்க முடியும் என்பதற்கு இது ஒரு பருக்கைச் சான்று. இவர்கள் எழுதிக் கொடுப்பதைத்தான் ஆலடி அருணா பயபக்தியுடன் வாசித்துக் கொண்டிருக்கிறார்.

சென்னைச் சிறையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. சிறைக் கலகங்களை ஒடுக்குவதற்கென்று சட்ட விதிகளின் படியான சில நடைமுறைகள் உள்ளன. வழக்கமான சில வழிமுறைகளும் உள்ளன. இந்த நடைமுறைகள், வழிமுறைகள் எதனையும் அதிகாரிகள் கடைபிடித்ததாகத் தெரியவில்லை. சிறையில் கலகம் என்றதும் 'அலாரம்' வைப்பதுதான் உடனே செய்ய வேண்டியது. அதாவது சிறைச் சங்கு ஒலிக்கும். சிறைக் காவலர்கள் அணி வகுப்பார்கள். கைதிகள் அவரவர் அடைப்புகளுக்குள் போய் வரிசையாக உட்கார்ந்து விடுவார்கள். அதிகாரிகள் ஒவ்வொரு தொகுதியாக வந்து கணக்கெடுத்துப் பூட்டுவார் கள். கலகக்காரர்களைத் தனிமைப்படுத்தி நடவடிக்கை எடுப்பார்கள். நவம்பர் 17 சென்னைச் சிறைக் கலகத்தின் போது 'அலாரம்' வைத்து ஒழுங்கை நிலைநாட்டும் முயற்சி ஏதும் நடைபெற்றதாகத் தெரியவில்லை.





படிப்பகம்

www.padippakam.com

கலகம் செய்ததாகக் கூறப்படும் கைதிகளை அமைதிப்படுத்துவதற்கு அதிகாரிகள் எவ்வித முயற்சியும் செய்ததாகத் தெரியவில்லை. பாக்ஸர் வடிவேலு சாவு குறித்து முறையான விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்பதாகத் தொடக்கத்திலேயே சிறை அதிகாரிகளும் மருத்துவ அதிகாரிகளும் உறுதி கொடுத்திருந்தால் இந்தக் கலகத்தையே தவிர்த்திருக்க முடியும். ஜெயக்குமாரும் செத்திருக்க வேண்டாம், வேறு மனித உயிர்களையும் இழந்திருக்க வேண்டாம்.

ஜெயக்குமார் கொல்லப்பட்ட பிறகும் கூட கலகம் புரிந்த கைதிகளோடு பேசியிருக்க முடியும். அருகில் சென்று பேச அச்சமாய் இருந்தால் ஒலிபெருக்கி அமைத்துப் பேசியிருக்கலாம்.

கண்ணீர்ப்புகை, தடியடிக்கு முன்னதாக இல்லையென்றாலும், துப்பாக்கியால் சுடுவதற்கு முன் எச்சரித்திருக்க வேண்டும். சிறைத் துறை, காவல் துறை இரண்டையும் சேராத எந்த அதிகாரியும் நேரில் வந்து நிலைமையை மதிப்பீடு செய்ததாகத் தெரியவில்லை. கடந்த காலத்தில் இதே போன்ற நிலைமைகள் எழுந்த போது மாவட்ட ஆட்சியர் அல்லது வட்டாட்சியர் அல்லது நீதிமன்ற நடுவர் நேரில் வந்து நிலைமைக்கேற்ப ஆணைகள் பிறப்பிப்பதுதான் வழக்கமான நடைமுறை. இந்த வழிமுறைகள், நடைமுறைகள் எதையும் கடைபிடிக்காமல் அதிரடிப் படையினரைக் கொண்டுவந்து கைதிகள் மீது ஏவியதற்கு நியாயமே இல்லை.

எந்தச் சிறைக் கலகமும் சில மணி நேரத்துக்கு மேல் நீடிக்க முடியாது என்பது அனுபவம் வாய்ந்த சிறை அதிகாரிகளுக்குத் தெரியும். ஆத்திர ஆவேசத்தில் வன்முறையில் ஈடுபடும் கைதிகளை அச்சம் பற்றிக் கொள்ள அதிக நேரமாகாது. அவர்கள் தங்கள் செயலின் விளைவை உணரும் போது, அல்லது உணருமாறு செய்யப்படும் போது, உடனே பின்வாங்கி அமைதியாகி விடுவார்கள். சிறை அடைபட்ட இடம், ஒன்றைச் செய்து விட்டு அங்கிருந்து ஓடி விட முடியாது என்பதை மறந்து விடக் கூடாது. இரண்டாவதாக, அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய ஆய்தங்கள் 'பகைவனின்' ஆயுதங்களுடன் ஒப்பிடுமிடத்து வெறும் துரும்புகளே என்பதையும் மறந்து விடக் கூடாது. அந்தத் துரும்புகளும் தீர்ந்து போனால் புதிதாய்க் கிடைக்காது என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.





மற்றொரு முக்கியமான காரணியும் உள்ளது. அதுதான் கைதிகளின் மனோதத்துவம் அல்லது உளவியல். கைதியைச் சிறையில் வைத்திருப்பது மதில் சுவர்களும்,

சென்னைச் சிறையில் சந்தேகத்திற்குரிய முறையில் உயிரிழந்த பாக்ஸர் வடிவேலு, அதிகாரி ஜெயக்குமாராலும் ஏனைய காவலர்களாலும் அடித்துக் கொல்லப்பட்டது உண்மையென்றால் (உண்மையென்றே நாம் நம்புகிறோம்) அவர் சிறைப்படுத்தப்பட்டோரின் உரிமைப் போராட்ட உயிர்த் தியாகிகளில் ஒருவர் ஆகிறார். துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த கைதிகள் : 'துட்டி' என்கிற பாபு, கொரட்டூர் சூர்யா நகர் பாபு, க.க. நகர் மணி, காதர், சைதாப்பேட்டை கோயில் குப்பம் அர்ஜுன் என்கிற பூமிநாதன், வியாசர்பாடி வெங்கட், மண்ணடி சசி, சைதாப்பேட்டை பாலமுருகன், லட்சுமணன், ஜெயபால். இவர்களைத் தவிர அசோக் நகர் பிரபாகரன் இரண்டு நாள் கழித்துக் காயங்களுக்குப் பலியாகி இறந்துள்ளார். இவர்களைத் தவிர வேறு சிலரும் சிறை அடக்குமுறையில் இறந்திருக்கக் கூடும். அனைவரையும் சிறைப் போராட்ட உயிர்த் தியாகிகளாக மதித்துப் போற்றி, அஞ்சலி செலுத்துகிறோம். அவர்களின் அன்பிற்குரியவர்களுக்கு உளமார்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்கிறோம். காயமடைந்த நூற்றுக்கு மேற்பட்ட கைதிகளுக்கும் ஆறுதல் கூறிக் கொள்கிறோம். அவர்கள் விரைவில் குணமடைய வேண்டுமென விரும்புகிறோம். சிறைப்படுத்தப்பட்டோரின் உரிமைகளுக்கான போராட்டங்களை உள்ளேயும் வெளியேயும் வீறுடன் முன்னெடுத்துச் செல்ல சென்னைச் சிறையில் சிந்திய செந்நீரின் பெயரால் உறுதி ஏற்போம்.



படிப்பகம்

www.padippakam.com

# ''கைதி செத்தால் காக்கை செத்தாற் போல''

சிறை அதிகாரி ஜெயக்குமார் கொல்லப்பட்டது தொடர்பாக வெள்ளை ரவி, திருவெற்றியூர் விஜி, சுப்பிரமணி, பர்மா சீனு, கொடுக்கு நந்தகோபால், விக்கி (எ) அடைக்கலராஜ், ஆனந்தன், நாதன், ரவிக்கோ விஜயகுமார் ஆகிய ஒன்பது கைதிகளைக் கைது செய்து வழக்குப் போட்டிருப்பதாகச் செய்தி வந்துள்ளது. ஆனால் பாக்ஸர் வடிவேலு கொல்லப்பட்டது தொடர்பாக எந்தச் சிறையதிகாரியும் எந்தச் சிறைக் காவலரும் இது வரை கைது செய்யப்படவும் இல்லை, எவர் மீதும் வழக்குத் தொடரப் படவும் இல்லை. வேலைநீக்கம், இடைநீக்கம் போன்ற துறைசார் நடவடிக்கைகள் கூட எடுக்கப்படவில்லை. நிர்வாகத் தரப்பில் உயிர் இழந்தவர்கள் ஜெயக்குமார், காவலர் நடராஜன் ஆகிய இருவர் மட்டுமே. ஆனால் அரசு தந்துள்ள கணக்குப்படியே துப்பாக்கிச் சூட்டில் இறந்த கைதிகளின் எண்ணிக்கை பதினொன்று. காயமுற்றவர்கள் நூற்றுக்கு மேல். என்றாலும் சிறைத் துறை, காவல்துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் கிடையாது. எதிர்காலத்தில் இந்தக் காக்கிச் சட்டைக் கொடியவர்களுக்கு வீர விருது வழங்கப்பட்டாலும் வியப்பதற்கில்லை. அப்படியானால்... ஒரு காலத்தில் சொல்வார்களே ''கைதி செத்தால் காக்கை செத்தாற் போல'' என்று. அதுதான் இந்த அரசின் கொள்கையா?



ஜெயக்குமார்

கம்பிக் கதவுகளும், கனத்த பூட்டுகளும், காவலர்களின் குண்டாந்தடிகளும் மட்டுமல்ல. இவையும் பிறவும் சேர்ந்து அரசின் அடக்குமுறை இயந்திரங்கள் குறித்து ஒருவிதமான அச்ச உணர்வை அவரது உள்ளத்தின் அடியாழத்தில் பதிய வைத்து விடுகின்றன. திடீர்க் கலகங்களின் போது இந்த அச்சம் சற்றே ஒதுங்கிக் கொள்கிறது. ஆத்திரம் அகன்றதும் அச்சம் மீண்டு விடுகிறது. கைதிகளின் இந்த உளவியலை ஒழுங்காகத் தெரிந்து வைத்திருக்கும் எந்தச் சிறை அதிகாரியும் அவசரமாய்த் துப்பாக்கி தூக்க மாட்டார்.



மேற்கண்ட காரணிகளைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது எந்தச் சிறையிலும் எந்தச் சூழலிலும் துப்பாக்கிச் சூடு தேவையற்றது என்று அறுதியிட்டுச் சொல்ல முடியும்.

கைதிகள் தப்பிச் செல்வதைத் தடுப்பதற்காகவே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக சிறைத் துறை அமைச்சர் சொல்லியிருப்பது கேலிக்குரியது. தப்பிச் செல்ல முயலும் கைதிகளா ''பத்திரிகையாளர்களே, வருக!'' என்று பதாகை எழுதிக் கூப்பிடுவார்கள்?

தப்பிச் செல்வதைத் தடுப்பதுதான் நோக்கம் என்றால் மதிலைச் சுற்றிக் காவல் போட்டாலே போதும்! மதிலுக்கு மேல் காவல் கோபுரங்கள் வேறு உண்டு! உயிருக்கு பயந்து கொட்டடிக்குள் பதுங்கியிருந்த கைதியைச் சுட்டுக் கொலை செய்து விட்டு... தப்புவதைத் தடுப்பதற்காகச் சுட்டேன் என்றால் கேழ்வரகில் நெய் வடிந்த கதைதான்! ஆலடி அருணா தன் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மோசடி அருணா ஆகி விட வேண்டாம்.

ஜெயக்குமாரைத் தவிர மற்றொரு சிறைக் காவலரும் இறந்திருக்கிறார். அவரது இறப்பும் வருத்தத்திற்குரியதே. சிறைக் காவலர்களின் நெடுநாளையக் கோரிக்கைகளில் ஒன்று : காவல் துறையினருக்கும் தீயணைப்புப் படையினருக்கும் தருவதுபோல் தங்களுக்கும் ஆபத்துப் படி (Risk Allowance) தர வேண்டும் என்பது. இவ்வளவு காலமும் ''சிறையில் உங்களுக்கு ஏது ஆபத்து?'' என்று அரசாங்கம் திருப்பிக் கேட்டு வந்தது. இப்போதாவது -- ஜெயக்குமாருக்கும் மற்றொருவருக்கும் நேரிட்டதைப் பார்த்த பிறகாவது -- சிறைக் காவலர்களின் கோரிக்கையை அரசு ஏற்றுக் கொள்ளட்டும்!

சிறைக் காவலர்களுக்கு எட்டு மணி நேர வேலையைப் புகுத்தியதால்தான் சிறைக் கலகத்தின் போது போதிய காவலர்கள் கடமையில் இல்லை என்று சிறைத் துறை அமைச்சர் சமாதானம் சொல்லப் பார்க்கிறார். கலகத்தைக் காரணம் காட்டி எட்டு மணி நேர வேலை உரிமையைப் பறித்துக் கொள்வதற்கு அடி போடுகிறாரோ என்று சந்தேகமாய் உள்ளது. கலகம் நடந்த போது ஒவ்வொரு காவலரும் எங்கே என்ன செய்து கொண்டிருந்தார் என்பதை விசாரித்து வெளிப்படுத்தியாக வேண்டும். எந்தக் காவலர் எந்த அதிகாரி வீட்டில் தட்டுக் கழுவிக் கொண்டிருந்தார், துணி துவைத்துக் கொண்டிருந்தார், கோழி மயிர் பிடுங்கிக் கொண்டிருந்தார், அதிகாரியின் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டு விடச் சென்றிருந்தார், அல்லது 'அம்மா'வுக்கு சினிமா டிக்கெட் வாங்கப் போயிருந்தார் என்பதெல்லாம் நமக்குத் தெரிந்தாக வேண்டும். வெள்ளைக்காரன் காலத்திய ஏவலர் (ஆர்டர்லி) முறையை இன்றளவும் சிறைத் துறையில் வைத்துக் கொண்டிருப்பதற்காக இந்த அரசு வெட்கப்பட வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

கடைசியாக ஒன்று: சோளக் களிக்கு பதில் நெல்லுச் சோறும், கூழுக்கு பதில் இட்லியும் கொடுப்பது மட்டுமல்ல சிறைச் சீர்திருத்தம். சிறை அமைப்பிலும் சனநாயகம் வேண்டும், சமூக நீதி வேண்டும். சிறை அதிகாரிகள் பிரபுமார்களாகவும் குறுநில மன்னர்களாகவும் இருக்கும் நிலையை ஒழித்துக் கட்ட வேண்டும்.

அவசரநிலைக் காலத்தில் சென்னைச் சிறையில் மிசாக் கைதிகளாக அடைபட்டிருந்த அரசியல் தலைவர்களைப் பார்த்து, "நீங்கள் வெளியே மன்னர்களாயிருக்கலாம், இங்கு நானே மன்னன், மன்னாதி மன்னன்" என்று கண்காணிப்பாளர் வித்யாசாகர் கூறியதை மறந்து விட வேண்டாம்.

குடியரசு நாட்டில் சிறைகள் மட்டும் முடியரசுத் தீவுகளாய் இருப்பதை ஏற்பதற்கில்லை. சிறைத் துரைமார்களின் அதிகாரங்களைக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தியாக வேண்டும். கண்காணிப்பாளர்கள் கண்காணிக்கப்பட வேண்டும். சிறையில் என்ன நடந்தாலும் வெளியே தெரியாது, வெளியே தெரிந்தாலும் நம்மை ஒன்றும் செய்து விட முடியாது என்ற சிறை அதிகாரிகளின் இறுமாப்பு ஒடுக்கப்பட்டாக வேண்டும். இருட் சிறைகளுக்குள் மனித உரிமைகளின் ஒளிக் கீற்றுகள் தடையின்றிப் பாயட்டும். சிறைகளின் மீது சமூகத்தின் பார்வை மறைவின்றிப் படரட்டும். சிறைகளின் மீது சமூக மேற்பார்வை, மக்கள் கண்காணிப்பு (Social oversight and people's superintendence of prisons) இதற்கு வழிவகை இல்லையேல் சிறைச் சீர்திருத்தங்கள் எல்லாம் பொருளற்றவையே. உயிருக்கு உத்தரவாதம் இல்லாத போது வயிற்றுக்கு என்ன கொடுத்தால் என்ன?

சிட்டிபாபு தனது சிறை நாட்குறிப்பில் இப்படி எழுதினார்: "இந்தக் கோட்டைச் சுவர்கள் நேற்று வரை நம் மாதவனின் கையில்தான் இருந்தன. அவர் இவற்றைச் சீர்திருத்தத் தவறி விட்டார். அதன் பலனைத்தான் நாங்கள் இப்போது அனுபவிக்கிறோம்"

மாதவனைப் பற்றி சிட்டிபாபு எழுதியது போல் எதிர்காலத்தில் வேறொருவர் ஆலடி அருணாவைப் பற்றி எழுத வாய்ப்பளித்து விடக் கூடாது என்பதே நம் கவலை. ❑

## நால்வர் மரண தண்டனைக் குறைப்பு :

# குடியரசுத் தலைவருக்கு முதுபெரும் கம்யூனிஸ்டுத் தலைவர் வேண்டுகோள்

நளினி, முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோரின் உயிரைக் காக்க இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் மூத்த தலைவரும் பழம்பெரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய தோழர் ஹிரேன் முகர்ஜி இந்தியக் குடியரசுத் தலைவருக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார். மகசேசே விருதும் ஞானபீட விருதும் பெற்ற புகழார்ந்த எழுத்தாளர் மகாஸ்வேதா தேவியும் இதேபோல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புகழ்பெற்ற வங்காள நடிகர் சௌமித்ர சாட்டர்ஜி, திரைப்படத் தயாரிப்பாளர் கௌதம் கோஷ், இசைக் கலைஞர் சுமன் சாட்டர்ஜி ஆகியோரும் இதே வேண்டுகோளுடன் குடியரசுத் தலைவருக்கு மடல் அனுப்பியுள்ளார்கள்.

இவர்களனைவரும் கல்கத்தாவிலிருந்து இந்தக் கருணை மடல்களை அனுப்பியுள்ளார்கள். மேற்கு வங்கத் தலைநகரிலிருந்து இதே போல் மடல் அனுப்பியுள்ள ஏனைய பெருமக்கள் :

மருத்துவர் விஷ்ணு முகர்ஜி, எழுத்தாளர் சுனிதிகுமார் கோஷ், கல்வியாளர் நாப் குமார் நந்தி, எழுத்தாளர் அஜீசுல் ஹக், அரசியல் செயல்வீரர் நிஷித் பட்டாச்சார்யா, பொருளியல் அறிஞர் தேவப்பிரத்த பண்டா, எழுத்தாளர் எம். சென், இதழாசிரியர் கிருஷ்ண பந்தோபாத் யாய், பொருளியல் அறிஞர் ஆர். முகர்ஜி, இசைக் கலைஞர் விபுல் சக்ரவர்த்தி, இசைக் கலைஞர் அனுஸ்ரீ சக்ரவர்த்தி, தொழிற்சங்கத் தலைவர் சமிரன் மஜூம்தார், கவிஞர் கருணா சிந்து டே, ஆசிரியர் உமா குந்து, மனித உரிமைப் போராளி அமித்யுத்தி குமார்

இவர்களைத் தவிர சென்னையிலிருந்து அறிவியல் அறிஞர் எஸ். கோபால், ஐதராபாத்திலிருந்து புரட்சி எழுத்தாளர் வரவர ராவு ஆகியோரும் நால்வர் உயிர்காக்கக் குடியரசுத் தலைவருக்கு மடல் அனுப்பியுள்ளார்கள்.

இந்தச் செய்தியைத் தோழர் வரவர ராவு நமக்கு அனுப்பியுள்ளார்.

## மரண தண்டனையை எதிர்த்து... தமிழக எழுத்தாளர் மாநாடு

சென்ற நவம்பர் 27 சனி காலை சென்னை அண்ணா சாலையில் உள்ள தேவநேயப் பாவாணர் நூலகக் கட்டட அரங்கத்தில் மரண தண்டனைக்கு எதிரான தமிழக எழுத்தாளர் மாநாடு நடைபெற்றது.

தமிழண்ணல், ராஜம் கிருஷ்ணன், சுந்தர ராமசாமி, இந்திரா பார்த்தசாரதி, கி. ராஜநாராயணன், சிற்பி பாலசுப்பிரமணியம், கோவை ஞானி, பா. செயப்பிரகாசம், நா. முத்துசாமி, இன்குலாப், மு. மேத்தா, பொன்னீலன், அ. மார்க்ஸ், ரவிக்குமார் மற்றும் பல எழுத்தாளர்கள் கலந்து கொண்டார்கள்.

தோழர் எஸ்.வி. ராஜதுரை தலைமை வகித்தார்.

இந்நிகழ்ச்சியை மரண தண்டனை எதிர்ப்பு இயக்கம் ஒழுங்கு செய்து நடத்தியது. புகழ் பெற்ற தமிழ் எழுத்தாளர்கள் ஏராளமானோர் நான்கு தமிழர் மரண தண்டனைக் குறைப்புக்காக குடியரசுத் தலைவருக்கு மடல் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com

# டான் பிரீனின் அயர்லாந்து விடுதலைக்கான எனது போராட்டம்

# மக்களின் கட்டளை

6

1918 நவம்பரில் முதல் உலகப் போர் ஒரு முடிவுக்கு வந்தது. போர் முடிவடைந்த ஒரு வாரத்திலேயே அயர்லாந்துக்கான பொதுத் தேர்தலும் அறிவிக்கப்பட்டது. டிசம்பர் 14 தேர்தலுக்கான நாளாகவும் குறிக்கப்பட்டது.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு வந்துள்ள தேர்தல் இது. ஏழு ஆண்டுகளாக அயர்லாந்தில் பொதுத் தேர்தல் எதுவும் நடைபெறவில்லை. இந்த இடைக்காலத்தில் இங்கிலாந்தின் மீதிருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் மக்களுக்கு இல்லாமல் போயிருந்தது. பிரித்தானிய நாடாளுமன்றத்திற்குப் பிரதிநிதிகளை அனுப்பித்தான் என்ன பயன் கிடைக்கப் போகிறது? அயர்லாந்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் நூறு பிரதிநிதிகளால் எதுவும் சாதித்து விட முடியாது. பிரித்தானிய நாடாளுமன்றத்தில் எதுவும் செய்ய இயலாத சொற்பச் சிறுபான்மையினர் இவர்கள். இவர்களின் குரல் அங்கு ஒருபோதும் எடுபட்டதே கிடையாது.

தன்னாட்சிக் கோரிக்கைக்கு இங்கிலாந்து செய்த இரண்டகத்தை அயர்லாந்து மக்களால் மறக்க முடியாது. கட்டாயப் படைச் சேர்க்கை குறித்த கசப்பும் மக்கள் மனதில் நீங்காமல் இருந்தது. 1916ஆம் ஆண்டு எழுச்சிதான் மக்களுக்கு நம்பிக்கையூட்டிய ஒரே நிகழ்வு. அயர்லாந்து மக்கள் வாழ்வில் புது ரத்தம் பாய்ச்சிய நிகழ்ச்சி அது. முற்ற முழுதான விடுதலையையே அவர்கள் நாடி நின்றனர். இடையில் நடந்த இடைத்தேர்தல்களிலும் மக்களின் விடுதலை நாட்டமே வெளிப்பட்டது.

இப்பொழுது பொதுத் தேர்தல் வந்துள்ளது. பிரித்தானிய அரசமைப்பில் வயதுவந்தோர் அனைவரும் வாக்களிக்கப் போகும் முதல் தேர்தல் இது. எங்களுடைய போராட்டத்திற்கான கட்டளையை மக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பாக இத் தேர்தலைக் கருதினோம்; இளைஞர்கள் மிகப் பெருவாரியாக எங்கள் இலட்சியத்தை ஆதரித்து வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தோம்.

ஆனால், நாங்கள் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. மக்களுக்குக் கற்பிக்க வேண்டும்; அவர்களை இயக்கமாக ஒன்று திரட்ட வேண்டும். அரசியல் அமைப்பான 'சின் பெயினுக்கும்' (Sinn Fein) படைப்பிரிவான 'அயர்லாந்து தொண்டர் படை'க்கும் இடையேயான வேறுபாடு கூட பொதுமக்களுக்கு இன்னும் தெளிவாக விளங்கவில்லை. 1916ஆம் ஆண்டுக் கிளர்ச்சி பொதுவாக 'சின்பெயின் எழுச்சி (Sinn Fein Rising) என்றே அழைக்கப்பட்டது. எங்களுடைய தொண்டர் படையை ''சின் பெயின் தொண்டர் படை'' என்றே மக்கள் அழைத்தனர். பச்சை, வெள்ளை, ஆரஞ்சு ஆகிய மூவண்ணம் கொண்ட குடியரசுக் கொடியை 'சின்பெயின் கொடி' என்றும் அழைத்தனர். இவ்வாறு தவறாகச் சூட்டிய பெயர்கள் பற்றி நாங்கள் அதிகம் கவலை கொள்ளவில்லை. ஏனெனில் சின் பெயின் அரசியல் கட்சியும் குடியரசு இலட்சியங்களுக்கு ஏற்பவே தன் திட்டங்களை வகுத்தது. அங்கங்கே விரைந்து தோன்றிக் கொண்டிருந்த 'சின்பெயின் மன்றங்'களின் தலைவர்கள், செயலர்கள் ஆகியோர் அந்தந்தப் பகுதிகளின் தொண்டர் படைத் தளபதிகளாகவும் இருந்தார்கள். சின்பெயின் அரசியல் கட்சியிலிருந்த பெரும்பான்மையான இளைஞர்கள், படைப் பிரிவின் தொண்டர்களாகவும் இருந்தார்கள். பெரும்பாலான தொண்டர் படையினரும் சின்பெயின் மன்றங்களில் உறுப்பினர்களாக இருந்தார்கள்.

தேர்தலின் போது நாடு முழுவதும் சின் பெயின் அலையே வீசியது; மக்கள் சின்பெயின் 'வெறியர்'களாகவே மாறினார்கள். பெரும்பாலான மதகுருமார்கள் எங்களுக்கு ஆதரவாக இருந்தார்கள். எங்களுடைய பேச்சாளர், அமைப்பாளர்களின் உற்சாகமும் ஆர்வமும் கரைபுரண்ட வெள்ளமானது. குடியரசு அரசியல் இலட்சியம் காட்டுத்தீயாய்ப் பற்றிப் பரவியது. ஆனால் எங்களுடைய படைப் பிரிவு சிறிது சிறிதாய் தேயத் தொடங்கியது.

படைப்பிரிவின் தேய்மானம் கவலை அளித்தாலும், தேர்தலில் வெற்றி பெறுவதே உடனடித் தேவையாயிருந்தது. தேர்தலுக்குப் பின் படை வலிமையைப் பெருக்கிக் கொள்ள முடியும். எங்கள் இலட்சியத்திற்கான கட்டளையை மக்களிடமிருந்து பெற்றாக வேண்டும்; அதுவே எங்கள் போராட்டத்திற்கு அறவலுச் சேர்க்கும். எனவே முழு மூச்சாகத் தேர்தலில் குதித்தோம்.

குடியரசு ஆதரவு வேட்பாளர்களுக்கு இரவு பகலாய் உழைத்தோம். எந்தவொரு சுவரையும் நாங்கள் விட்டுவைக்கவில்லை; எந்த நாற்சந்தியும் எங்கள் கண்ணிலிருந்து தப்பவில்லை.

''சின் பெயினுக்குப் பின்னால் அணிவகுத்து நில்லுங்கள்!''

''குடியரசு இலட்சியத்திற்கு ஆதரவாய் வாக்களியுங்கள்!''

''1916ஆம் ஆண்டுப் போராளிகளை மறந்து விடாதீர்கள்''

கலைவேலு



படிப்பகம்

www.padippakam.com

-- இவை போன்ற முழக்கங்களே எல்லா இடங்களையும் அலங்கரித்தன.

எங்களுடைய கொள்கையை நாங்கள் மூடி மறைக்கவில்லை. வெற்றிபெறும் குடியரசு ஆதரவு வேட்பாளர்கள் எவரும் பிரித்தானிய நாடாளுமன்றத்திற்குள் நுழையப் போவதில்லை; அவர்கள் அயர்லாந்துக் குடியரசை அமைப்பார்கள்; அதன் அங்கீகாரத்திற்காக உழைப்பார்கள். இந்த உறுதி மொழியோடுதான் எங்கள் வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட்டார்கள்.

தேர்தல் முடிவு நாங்கள் எதிர்பார்த்தது போலவே அமைந்தது. மன்ஸ்டரில் (Munstar) வாட்டர் போர்டு நகரம் (Waterford city) தவிர அனைத்து இடங்களிலும் எங்களுக்கே வெற்றி. லெயின்ஸ்டர் (Leinster), கொன்னாட் (Connaught) ஆகிய இடங்களிலும் மிகப் பெரிய வெற்றி கிடைத்தது. அல்ஸ்டரில் (Ulster) பெரும்பாலான இடங்களைக் குடியரசு ஆதரவு வேட்பாளர்களே கைப்பற்றினார்கள். மொத்தம் 105 தொகுதிகளில் 73 இடங்களில் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராய் மக்கள் வாக்களித்தார்கள்; அயர்லாந்துக் குடியரசு அமைக்கக் கட்டளையிட்டார்கள்.

தேர்தலில் கடுமையாக உழைத்த பலர் இப்பொழுது உயிருடன் இல்லை. நினைத்தால் மனம் கனக்கிறது. தின்னி லேசி (Dinny Lacy) உள்நாட்டுப் போரின் பொழுது அவருடைய சொந்த மண்ணிலேயே கொல்லப்பட்டார். சீன் தஃபி (Sean Duffy), பதி மெலோனி (Paddy Maloney) ஆகிய இருவரும் ஒரு மோதலில் கொல்லப்பட்டார்கள். பதி மெலோனியின் தந்தையார் தேர்தலில் வெற்றி பெற்றவர்களில் ஒருவர். இந்த மோதல் புகழ் பெற்ற சோலோகெட் பெக் (Solohead beg) பக்கத்தில்தான் நடைபெற்றது. சீன் அல்லன் (Sean Allen) கார்க் சிறையில் (Cark Jail) தூக்கிலிடப்பட்டார். 'ஸ்பார்க்கு' (தீப்பொறி) பிரீன் (Sparkie Breen) உள்நாட்டுப் போரில் கொல்லப்பட்டார். எத்தனை எத்தனை அருமையான மனிதர்களை நாங்கள் இழந்திருக்கிறோம்!

ஒரு மாதம் கழித்து 1919 சனவரி 21இல், பெரும்பான்மை அயர்லாந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இப்பிரதிநிதிகள் டப்ளினில் (Dublin) கூடினார்கள். வெளிப்படையான இந்த அமர்வில் (Public Session) அயர்லாந்துக் குடியரசை முறையாற அறிவித்தார்கள்; அரசை நிறுவினார்கள். அயர்லாந்து நாடாளுமன்ற அமர்வு நடைபெற்றுக் கொண்டிருந்த அதே நாளில், அயர்லாந்துக் குடியரசு அமைந்து விட்டதை உலகிற்கு அவர்கள் அறிவித்துக் கொண்டிருந்த ஏறத்தாழ அதே நேரத்தில் எங்கள் சின்னஞ்சிறிய படை ஒரு தாக்குதலை நடத்தியது. பிரித்தானிய ஆட்சிக்கு எதிராய் மக்கள் தேர்தலில் வாக்களித்த பின்னர் நாங்கள் தொடுத்த முதல் தாக்குதல் அது.

தேர்தலுக்குப் பின் எங்கள் நிலையை ஆய்வு செய்து கொள்ள நிறையவே நேரம் கிடைத்தது. தேர்தலின் வழியாக மக்கள் தங்கள் கருத்தைத் தெளிவாகவே அறிவித்து விட்டார்கள். "அயர்லாந்து மண்ணிலிருந்து அயல்நாட்டுப் படையை விரட்டி அடியுங்கள்." -- மக்களின் கட்டளை இது. இப்பொழுது எங்களுக்கு எந்தக் குழப்பமும் இல்லை.

ஆனால் தேர்தல் எங்கள் படையின் மீது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. அச்சப்பட்டது போலவே தொண்டர் படையில் சிதைவு ஏற்பட்டிருந்தது. இந்தச் சிதைவு கட்டாயப்படைச் சேர்க்கை அச்சம் விலகிய பொழுதே தொடங்கியதுதான். எனினும் இப்பொழுதைய விலகல் பெரிதாக இருந்தது. வீரர்களாயிருந்த பலர் அரசியல்வாதிகளாய் மாறிப் போனார்கள். இதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

சீன் திரேசியுடன் இது குறித்துப் பலமுறை விவாதித்தேன். செயல், செயல் ' ஒன்றுதான் இந்தப் போக்கைத் தடுத்து நிறுத்தும்.

அந்தச் செயலுக்கான வாய்ப்பு எதிர்பார்த்ததைவிட விரைவிலேயே கூடி வந்தது.

1919ஆம் ஆண்டு சனவரித் திங்கள் தொடக்கம் அது. சோலோ கெட்பெக் கற்சுரங்கத்திற்கான வெடிபொருட்கள் கொண்டு வரப்படுவதாகக் கேள்விப்பட்டோம். வெடிபொருட்கள் ஏற்றி வரும் வண்டிக்குக் காவலாய் ஆயுதமேந்திய காவலர்கள் உடன் வருவர் என்பதையும் அறிந்தோம்.

"அருமையான வாய்ப்பு இது. சண்டையைத் தொடக்கி வைப்போம். சோர்ந்து கிடக்கும் நம் வீரர்களுக்கு இது அருமருந்தாய் அமைந்து விடும்" -- சீன் திரேசியிடம் விவரமாய் எடுத்துச் சொன்னேன்.

எங்களுடைய படை எண்ணிக்கை மிகவும் குறைவே! அதிலும் உறுதி கொண்ட நெஞ்சினரை விரல் விட்டு எண்ணி விடலாம்.

கெரில்லாப் போருக்கு எண்ணிக்கை முகாமையன்று; இயங்கு திறனே அடிப்படையானது என்பதை நான் புரிந்திருந்தேன்.

என்னுடைய புரிதல் சரியானது என்பதை சோலோகெட் பெக் நிகழ்ச்சி மெய்ப்பித்தது.

**(மீண்டும் சந்திப்போம்)**

## 'தன்னுரிமை' - விவாதம் தொடரும்!

'தன்னுரிமை' - ஒரு விவாதக் குறிப்பு குறித்து த.நா.மா.லெ.க. பொதுச் செயலாளர் தோழர் கார்முகில் வரைந்த விமர்சனக் குறிப்பை சென்ற இதழில் வெளியிட்டோம். அதற்கான விடை அல்லது விளக்கம் இடம் போதாமையால் இவ்விதழில் இடம் பெறவில்லை. அதனை அடுத்த இதழில் எதிர்பார்க்கலாம். இதே பொருள் குறித்து த.தே.பொ.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் கி. வெங்கட்ராமன் தமிழர் கண்ணோட்டத்தில் ஒரு மறுப்புக் கட்டுரை எழுதியுள்ளார். அக்கட்டுரையின் சுருக்கமும் அதற்கான விடையும்கூட அடுத்த இதழில் இடம் பெறும்.

- ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com

நாம் முனைப்பு வாய்ந்த கருத்தியல் போராட்டத்தை விரும்புகிறோம். ஏனென்றால் அதுவே நமது போராட்டத்தின் நலனுக்காகக் கட்சிக்குள்ளும் புரட்சிகர அமைப்புகளுக்குள்ளும் ஒற்றுமையை உறுதிப்படுத்துவதற்கான படைக்கலன் ஆகும். பொதுவுடைமைவாதி, புரட்சிக்காரர் ஒவ்வொருவரும் இந்தப் படைக்கலனைக் கையில் எடுத்தாக வேண்டும்.

ஆனால், தாராளவாதமோ கருத்தியல் போராட்டத்தை மறுதலித்துக் கோட்பாடற்ற அமைதியை விரும்புகிறது. இவ்விதம் சீரழிந்த, அற்பவாத மனப்போக்கிற்கு அடிகோலுகிறது, நட்புக்காகவும் வேண்டி நிலைமையைச் சரிய விடுவது, கோட்பாட்டு வழியில் வாதிடுவதைத் தவிர்த்து விடுவது... அல்லது நல்லுறவு பேண வேண்டும் என்பதற்காக முழுமையாய் நுழைந்து ஆராயாமல் இலேசாகத் தொட்டுச் செல்வது... இதன் விளைவாக அமைப்புக்கும் கேடு, ஆளுக்கும் கேடு. இது தாராளவாதத்தின் ஒரு வகை.

தன்னுடைய ஆலோசனைகளை முனைப்பாக அமைப்பிடம் முன்வைக்காமல் அந்தரங்கமாகப் பொறுப்பற்றக் குற்ற விமர்சனத்தில் ஈடுபடுவது. ஆட்களிடம் அவர்களின் முகத்துக்கு நேராக எதையும் வம்பைத் தவிர்த்து பழிவராமல் மட்டும் பார்த்துக் கொள்வது. இது தாராளவாதத்தின் மூன்றாம் வகை.

உத்தரவுகளுக்குக் கீழ்படிய மறுத்துத் தன் சொந்தக் கருத்துகளை மட்டுமே பெருமைப்படுத்துவது... அமைப்பிடமிருந்து தனிக் கரிசனை கோருவது, ஆனால் அதன் ஒழுங்குக் கட்டுப்பாட்டை மறுதலிப்பது. இது தாராளவாதத்தின் நான்காம் வகை.

ஒற்றுமை அல்லது முன்னேற்றத்திற்காக வேண்டியோ சரிவர வேலை நடைபெறுமாறு செய்வதற்காகவோ தவறான கருத்துகளை எதிர்த்து வாதிட்டுப் போராடுவதற்குப் பதிலாகச்

### மாவோ கட்டுரை

# தாராளவாதம் எதிர்ப்போம்

### 1937 செப்டெம்பர் 7

கட்சியிலும், புரட்சிகர அமைப்புகளிலும், குறிப்பிட்ட சில அலகுகளிடத்தும், தனியாட்களிடத்தும் அரசியல் சிதைவு ஏற்படச் செய்கிறது.

தாராளவாதம் பல்வேறுபட்ட வழிகளில் வெளிப்படுகிறது.

ஒருவர் முன்பே தெரிந்தவர் என்பதற்காகவோ, ஊர்க்காரர் என்பதற்காகவோ, பள்ளித் தோழர் என்பதற்காகவோ, நெருங்கிய நண்பர் என்பதற்காகவோ, அன்பிற்குரியவர் என்பதற்காகவோ, பழைய கூட்டாளி என்பதற்காகவோ, முன்பு தன்கீழ் பணியாற்றியவர் என்பதற்காகவோ, அவர் தவறு செய்திருப்பவர் எனத் தெளிவாகத் தெரிந்தும் அமைதிக்காகவும்

சொல்லாமல் அவர்களின் முதுகுக்குப் பின்னால் கிசுகிசுப்பது... அல்லது கூட்டத்தில் எதுவும் சொல்லாமல் இருந்துவிட்டுப் பிறகு கிசுகிசுப்பது. கூட்டு வாழ்க்கைக் கோட்பாடுகளைக் கிஞ்சிற்றும் மதியாமல் தனக்கு விருப்பமானதையே செய்து கொண்டிருப்பது. இது தாராளவாதத்தின் இரண்டாம் வகை.

சொந்த முறையில் தன்னை பாதிக்காதவை என்றால் அவை எப்படியோ போகட்டும் என்று விட்டுவிடுவது... தவறு இன்னதென்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்திருந்தாலும், புத்திசாலித்தனமாய் இருந்து சொந்த முறையில் தாக்குதல் தொடுப்பதும், சண்டை பிடிப்பதும் சொந்தக் குரோதத்தை வெளிப்படுத்துவதும் பழிக்குப் பழி வாங்க முயல்வதுமான செயல்களில் ஈடுபடுவது இது தாராளவாதத்தின் ஐந்தாம் வகை.

தவறான கருத்துகளை செவிமடுத்த போதிலும் அவற்றை மறுக்காமல் விடுவது... எதிர்ப்புரட்சிப் பேச்சுகளே என்றாலும் கூட அவற்றை செவிமடுத்து விட்டு அறிவிக்காமல் விடுவது, எதுவுமே நடக்காதது போல் அவற்றை அமைதியாக எடுத்துக் கொள்வது. இது தாராளவாதத்தின் ஆறாம் வகை.

வெகுமக்களுக்கு நடுவில்



படிப்பகம்

www.padippakam.com

இருந்தாலும் கருத்துப் பரப்புரையும் கிளர்ச்சிப் பணியும் செய்யத் தவறுவது, அல்லது அவர்களிடயே புலனாய்வுகள், விசாரணைகள் செய்யத் தவறுவது, அவர்களிடம் ஏனோதானோ என்றிருப்பது, அவர்களது நல்வாழ்வில் அக்கறை காட்டாமல் இருப்பது, தான் பொது வுடைமைவாதி



என்பதை மறந்துவிட்டு பொதுவுடைமைவாதி அல்லாத சாதாரண மனிதரைப் போல் நடந்து கொள்வது. இது தாராளவாதத்தின் ஏழாம் வகை.

எவரேனும் ஒருவர் வெகுமக்களின் நலன்களுக்கு ஊறு செய்யக் கண்டாலும் ஆத்திரப்படாமல் இருப்பது அல்லது அவரைத் தடுக்க முற்படாமலோ தடுத்து நிறுத்தாமலோ அவரிடம் நியாயத்தைச் சொல்லி வாதிடாமலோ இருந்து விடுவது, அவர் தொடர்ந்து ஊறு செய்யும்படி விட்டு விடுவது. இது தாராளவாதத்தின் எட்டாம் வகை.

வரையறுத்த திட்டமோ திசைவழியோ இல்லாமல் அரைமனதாக வேலை செய்வது... வேண்டா வெறுப்பாக வேலை செய்து காலத்தை ஓட்டுவது -- "பூசாரியாக இருக்கும் வரை மணியடித்துவிட்டுப் போவோம்." இது தாராளவாதத்தின் ஒன்பதாம் வகை.

புரட்சிக்குப் பெருஞ்சேவை புரிந்து விட்டதாகத் தன்னைப் பற்றியே கருதிக் கொள்வது, பழம்பெரும் வீரரென்று பெருமை பேசுவது, பெரும் பணிகளுக்கும் ஈடு கொடுக்க முடியாமல் சிறு பணிகளையும் வெறுத்து ஒதுக்குவது, வேலையில் உறுதியற்றும் படிப்பில் கருத்தூன்றாமலும் இருப்பது. இது தாராளவாதத்தின் பத்தாம் வகை.

தன்னுடைய தவறுகளை அறிந்திருந்தும், அவற்றைத் திருத்திச் சரிசெய்ய எவ்வித முயற்சியும் செய்யாமல் தானே தன்பால் தாராளவாதப் போக்கினை மேற்கொள்வது. இது தாராளவாதத்தின் பதினொன்றாம் வகை.

இன்னும் பல வகைகளையும் நாம் குறிப்பிடலாம். ஆனால் இந்தப் பதினொன்றும் முகாமையானவை.

இவையெல்லாம் தாராளவாதத்தின் வெளிப்பாடுகளே ஆகும்.

தாராளவாதம் என்பது புரட்சிகரக் கூட்டமைப்பில் பெரிதும் ஊறு செய்யக் கூடியது. அது அரிக்கும் தன்மையுள்ள அமிலம் ஆகும். ஒற்றுமையை அரித்தெடுப்பதும், ஒத்திசைவைக் குலைப்பதும், வெறுப்பை வளர்த்து வேற்றுமையை உண்டாக்குவதும் ஆகும். புரட்சிகர அணிகளுக்குரிய கட்டுத் திட்டமான அமைப்பையும், கண்டிப்பான ஒழுங்கையும் அது



படிப்பகம்

www.padippakam.com

பறித்துக் கொள்கிறது.

கொள்கைகள் நிறைவேற்றப்பட்டு விடாமல் தடுத்து விடுவதோடு கட்சியால் வழிநடத்தப்படும் வெகுமக்களிடமிருந்து கட்சி அமைப்புகளை அயன்மைப்படுத்துகிறது. இது மிகமிக மோசமான போக்காகும்.

தாராளவாதம் குட்டி முதலாளித்துவத் தன்னல நாட்டத்திலிருந்து பிறக்கிறது. அது சொந்த நலன்களுக்கு முதலிடம் கொடுத்து, புரட்சியின் நலன்களை இரண்டாம் இடத்திற்குத் தள்ளி விடுகிறது. இது கருத்தியல், அரசியல், அமைப்பியல் தாராளவாதத்துக்கு வழிகோலுகிறது.

தாராளவாதிகள் மார்க்சியக் கோட்பாடுகளை சூக்குமச் சூத்திரங்களாகப் பார்க்கிறார்கள். அவர்கள் மார்க்சியத்தை ஏற்றுக் கொள்கிறார்கள் என்றாலும் அதனை நடைமுறைப்படுத்த, முழு அளவில் நடைமுறைப்படுத்த அணியமாய் இருப்பதில்லை. அவர்கள் தங்களின் தாராளவாதத்தை மார்க்சியத்தால் மாற்றீடு செய்ய அணியமாய் இல்லை. இவர்கள் தங்களுக்குரிய மார்க்சியத்தை வைத்துள்ளார்கள், அதே போல் தங்களுக்குரிய தாராளவாதத்தையும் வைத்துள்ளார்கள் -- மார்க்சியம் பேசுகிறார்கள், ஆனால் தாராளவாதத்தை நடைமுறைப்படுத்துகிறார்கள். மார்க்சியத்தை மற்றவர்களுக்குப் பொருத்திப் பார்த்தாலும், தங்களுக்கென்று வரும் போது தாராளவாதத்தையே பொருத்திக் கொள்கிறார்கள். இருவகைச் சரக்குகளையும் இருப்பில் வைத்துள்ளார்கள். ஒவ்வொன்றுக்கும் ஒரு பயன்பாடு இருக்கக் காண்கிறார்கள். குறிப்பிட்ட சிலரது மனம் இப்படித்தான் வேலை செய்கிறது.

தாராளவாதம் என்பது சந்தர்ப்பவாதத்தின் வெளிப்பாடுகளில் ஒன்று. இது அடிப்படையிலேயே மார்க்சியத்துடன் மோதிக் கொள்கிறது. இது எதிர்வகைப்பட்டது, புறநிலையில் எதிரிக்குத் துணை செய்யும் விளைவைத் தரக் கூடியது. அதனால்தான் பகைவன் நம்மிடையே தாராளவாதம் காப்பாற்றப்படுவதை வரவேற்கிறான். இந்நிலையில் புரட்சியின் அணிகளில் அதற்கு இடமே இருக்கக் கூடாது.

எதிர்வகைப்பட்டதான தாராளவாதத்தைத் தோற்கடிக்க நேர்வகை உணர்வு கொண்ட மார்க்சியத்தை நாம் பயன்படுத்தியாக வேண்டும். பொதுவுடைமைவாதி பரந்த உள்ளம் படைத்திருக்க வேண்டும், உறுதி மிக்கவராகவும் முனைப்புடன் செயல்படக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். புரட்சியின் நலன்களை உயிராய்ப் போற்றி தன் சொந்த நலன்களைப் புரட்சியின் நலன்களுக்குக் கீழ்படுத்த வேண்டும். எப்பொழுதும் எங்கேயும் அவர் கோட்பாட்டை விடாது பற்றி நிற்க வேண்டும். தவறான கருத்துகள், செயல்கள் அனைத்துக்கும் எதிராக அலுப்பு சலிப்பின்றிப் போராட வேண்டும். கட்சியின் கூட்டு வாழ்க்கையை உறுதியாய்த் திடப்படுத்தி, கட்சிக்கும் வெகு மக்களுக்குமான உறவுகளை வலுப்படுத்த வேண்டும். சொந்த முறையில் எவரைப் பற்றியும் கவலை கொள்வதை விட அவர் கட்சியைப் பற்றியும் வெகுமக்களைப் பற்றியும் கவலைப்படக் கூடியவராய் இருத்தல் வேண்டும். இப்படித்தான் ஒரு பொதுவுடைமைவாதியாக அவரைக் கருத முடியும்.

உண்மைப் பற்றும் நேர்மையும் செயல் முனைப்பும் நற்பண்பும் உடைய அனைத்துப் பொதுவுடைமைவாதிகளும் நம்மிடையே குறிப்பிட்ட சிலர் வெளிப்படுத்தி வரும் தாராளவாதப் போக்குகளை ஒன்றுபட்டு எதிர்த்தாக வேண்டும். கருத்தியல் முனைமுகத்தே நமக்குள்ள வேலைகளில் இதுவும் ஒன்று. ❑

## தமிழ் எழுச்சி மாநாடு

தமிழகத் தமிழாசிரியர் கழகம் (கொங்கு மண்டலம்) சார்பில் சென்ற 13--11--99 சனிக்கிழமை காலை முதல் இரவு வரை தமிழ் எழுச்சி மாநாடு ஈரோடு கலைக் கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்றது. பள்ளிக் கல்வி இயக்குநர் திரு அரங்க தெய்வமணி தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் துரை. தில்லான், இரா. வடிவேலனார் முன்னிலை வகிக்க, ஈரோடு மாவட்டத் தலைவர் க. முருகேசன் வரவேற்புரை நிகழ்த்த, இரா. இளங்குமரனார் 'பயிற்று மொழியில் தமிழ்' என்ற தலைப்பிலும், சாலினி இளந்திரையன் 'தமிழனும் தமிழும்' என்ற தலைப்பிலும், தோழர் தியாகு 'வெல்லும் தமிழ்' என்ற தலைப்பிலும் உரையாற்றினார்கள். தமிழிசை அரங்கம், நாட்டிய அரங்கம், பாராட்டு பரிசளிப்பு யாவும் மாநாட்டில் இடம் பெற்றன. நிறைவாக நிகழ்ந்த தமிழ் எழுச்சி அரங்கத்தில் மாநிலத் தலைவர் பூ. தில்லைவளவன் தலைமை வகிக்க, மாநிலப் பொதுச் செயலாளர் சு. நஞ்சப்பன் வரவேற்புரை ஆற்றினார். வாழ்த்தரங்கத்தில் தமிழக அமைச்சர்கள் பலரும் கலந்து கொண்டார்கள். தமிழகக் கல்வி அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் மாநாட்டு மலரை வெளியிட்டு நிறைவுரை ஆற்றினார்.



படிப்பகம்

www.padippakam.com

**தோழர் பெ. மணியரசனுக்கு விடை**

# தேசிய விடுதலைப் போராட்டத்தைக் கம்யூனிஸ்டுக் கட்சியும் நடத்தலாம்!

***"இன்றைய காலகட்டத்தில் தேசியத் தன்னுரிமைப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் பங்கெடுக்கலாம். ஆனால் அப்போராட்டத்தை கம்யூனிஸ்டுக் கட்சி நடத்தக் கூடாது. காரணம் கம்யூனிஸ்டுக் கட்சி ஒரு வர்க்கத்தின் கட்சி. தேசிய இனப் போராட்டமோ பல வர்க்கங்கள் கலந்து கொள்ளக் கூடிய ஒட்டுமொத்த தேசிய இன எழுச்சி. தொழிலாளி வர்க்கத்திற்கு உரிய கம்யூனிஸ்டுக் கட்சி முன்னின்று தேசியப் போராட்டம் நடத்தினால் மற்ற வர்க்கங்கள் அதில் கலந்து கொள்ளத் தயக்கம் காட்டும். விருப்பமின்மை ஏற்படலாம். இந்த நிலை தேசியத் தன்னுரிமைப் போராட்ட வளர்ச்சிக்குத் தடையாய் அமையும்.***

***"மேற்கண்ட கருத்துகளை சில தோழர்கள் முன்வைக்கிறார்கள். குறிப்பாகத் தோழர் தியாகு (பொதுச் செயலாளர், தமிழ் தமிழர் இயக்கம்), ஈழமுரசு ஏட்டிற்கு அளித்த நேர்முகத்தில் இவ்வாறான கருத்துகள் கூறியிருக்கிறார். இக் கருத்துகளை நாம் முற்றிலுமாக மறுக்கிறோம்."***

**தமிழர் கண்ணோட்டம்** திங்களேட்டில் அதன் ஆசிரியரும், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளருமாகிய தோழர் பெ. மணியரசன் மேற்கண்டவாறு எழுதியுள்ளார். **தேசிய இனப் போராட்டத்தை கம்யூனிஸ்டு அல்லாத கட்சிதான் நடத்த வேண்டுமா? -- இது** அவரது கட்டுரையின் தலைப்பு. 1999 ஜூன் -- ஜூலை இதழில் தொடங்கி ஆகஸ்டில் தொடர்ந்து செப்டெம்பர் இதழில் முடிவடைகிறது இந்தக் கட்டுரை. இதழுக்கொரு பகுதியென மூன்று பகுதிகளை அது கொண்டுள்ளது.

"சில தோழர்கள்" என்று தோழர் பெ.ம. குறிப்பிட்டாலும் என்னைத் தவிர வேறு எவர் பெயரையும் சொல்லவில்லை. ஆகவே அவர் என்னை, என் கருத்துகளை மறுப்பதற்காகவே இக்கட்டுரையை எழுதியிருக்கிறார் எனக் கொள்வதில் தவறில்லை.

கட்டுரையின் மூன்றாவது பகுதியில் "தேசிய விடுதலை இயக்கங்களில் பொதுவுடைமை இயக்கம் முன்னணிப் பாத்திரம் வகிப்பது தனிச்சிறப்பானது" என்பதற்கு "ஒளிமிக்க உதாரணங்களை" எடுத்துக் காட்டிய பின் பெ.ம. எழுதுகிறார் :

***"தோழர் தியாகு தென்னாப்பிரிக்காவை எடுத்துக் காட்டக் கூடும்."***

மேலும் எழுதுகிறார் :

***"விடுதலைப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் பங்கெடுக்கலாம். ஆனால் கம்யூனிஸ்டுக் கட்சி அப்போராட்டத்தை நடத்தக் கூடாது என்று தோழர் தியாகு கூறுவதற்கு உரிய எடுத்துக்காட்டாக தென்னாப்பிரிக்கப் போராட்டம் அமையவில்லை."***

மேலும் எழுதுகிறார் :

***"தேசிய இனப் போராட்டத்தில் 'கம்யூனிஸ்டுகள்' பங்கெடுக்கலாம், ஆனால் கம்யூனிஸ்டுக் கட்சி அதை நடத்தக் கூடாது என்று தோழர் தியாகு சொல்வது விசித்திரமான வாதமாக உளளது."***

மேலும் எழுதுகிறார் :

***"முதலாளிய அரசாங்கம் கூட செய்யத் துணியாத காரியத்தை, கம்யூனிஸ்டுகளிடமிருந்து அவர்களின் அமைப்பைப் பிரித்து விடும் காரியத்தைத் தோழர் தியாகுவின் கருத்தியல் செய்கிறது."***

மேலும் எழுதுகிறார் :

***"தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு கம்யூனிஸ்டுக் கட்சி தேவையில்லை என்று அறிவித்துக் கொண்டு 'அனைவருக்கும் பொதுவானதாக'த் தோற்றம் காட்டும் கொள்கைப் பிரகடனம் இறுதியில் எந்த வகைச் சிந்தனை குடும்பத்துள் சேரும்? முதலாளியச் சிந்தனைக்குள்தானே சேரும்! மூலதனத்தை மொழியாக்கம் செய்து தந்த தோழர் தியாகுதான் இதற்கு விளக்கம் தர வேண்டும்."***

ஆக, தேசிய இனப் போராட்டத்தை

**தியாகு**



படிப்பகம்

www.padippakam.com

கம்யூனிஸ்டுக் கட்சி நடத்தக் கூடாது என்கிறார் தியாகு! வேண்டுமானால் அந்தப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் பங்கெடுக்கலாம் என்று சலுகை காட்டுகிறார் தியாகு! கம்யூனிஸ்டுகளிடமிருந்து அவர்களின் அமைப்பைப் பிரித்து விடும் கருத்தியலை முன்வைக்கிறார் தியாகு! இவ்வாறு முதலாளிய அரசாங்கம் கூட செய்யத் துணியாததைச் செய்கிறார் தியாகு! இறுதியில் முதலாளியச் சிந்தனைக்குள் போய்ச் சேரும் கொள்கைப் பிரகடனத்தைச் செய்கிறார் தியாகு!

இது என்ன அநியாயம்? **மூலதனத்தைத்** தமிழாக்கம் செய்தவர் இப்படியெல்லாம் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு எதிராக நிலை எடுக்கலாமா? -- கொதித்தெழுகிறார் பெ.ம.! மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், மாவோ... அனைவரிடமிருந்தும் அடுக்கடுக்காய் ஆதாரங்களை எடுத்துக்காட்டி, வரலாற்றுச் சான்றுகளை வரிசையாகக் கொண்டுவந்து நிறுத்தித் தியாகுவை, அவரது கருத்துகளை, அவரது கருத்தியலை வீழ்த்தி மார்க்சியத்தைப் பாதுகாத்து வெற்றிக்கொடி நாட்டுகிறார்!

தோழர் பெ.ம. எழுதிய கட்டுரையைப் படித்தவர்கள் பலருக்கும் இந்த எண்ணம் ஏற்பட்டிருந்தால் வியப்பில்லை. எனக்கும் கூட இந்த எண்ணம்தான் ஏற்பட்டிருக்கும் -- நானே தியாகுவாக இல்லாது போயிருந்தால்!

**என் கருத்து என்று சொல்லி அதை மறுப்பதற்காக எத்தனையோ மேற்கோள்களை எடுத்துக்காட்டும் பெ.ம. ஒரே ஒருமுறைகூட என்னிடமிருந்து நேர்க் கூற்றாக எந்த மேற்கோளும் காட்டவில்லையே, ஏன்?** என்னை மறுக்க முற்பட்டவர் என் கருத்தை என் வார்த்தைகளிலேயே ஒரு முறையாவது எடுத்துக்காட்ட வேண்டாமா?

அது போகட்டும். நான் என் கருத்துகளை எங்கு வெளியிட்டேனாம்? ஈழமுரசு ஏட்டிற்கு அளித்த நேர்முகத்தில் வெளியிட்டேனாம்!

நான் சென்ற ஆண்டு நவம்பர் -- திசம்பரிலும் இவ்வாண்டு பிப்ரவரி -- மார்ச்சிலும் ஐரோப்பா சென்றிருந்தேன். பாரிஸ் நகரத்தில் **ஈழமுரசு** ஏடு என்னைப் பேட்டி கண்டு வெளியிட்டது. 1998 திசம்பர் 17--23, திசம்பர் 24--30 இதழ்களில் என் பேட்டி இரு பகுதிகளாக வெளிவந்தது. இந்தப் பேட்டியில் எந்த இடத்திலும் நான் மேற்சொன்ன கருத்துகளை வெளியிடவே இல்லை; இச்சிக்கல் குறித்து விவாதிக்கவே இல்லை.

இந்த இரு பயணங்களின் போதும் என் நண்பரும் கவிஞருமாகிய தோழர் கி.பி. அரவிந்தனும் வேறு சில தோழர்களும் என்னிடம் பல்வேறு வினாக்களை எழுப்பி விடைகள் பெற்றனர். இந்த உரையாடல் முழுவதும் ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டது. அதிலிருந்து சில வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் பொறுக்கி எடுத்து **ஈழமுரசு** ஏடு **'தியாகுவிடம் சில கேள்விகள்'** என்ற தலைப்பில் எட்டு பகுதிகள் கொண்ட தொடராக வெளியிட்டது. 1999 மார்ச்சு 18--24 தொடங்கி, 1999 மே 6--12 முடிய அது வெளிவந்தது. இந்தத் தொடரில்தான் தேசிய விடுதலைப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகளின் பங்கு என்பது பற்றிச் சில கருத்துகள் இடம்பெற்றுள்ளன.

இந்தக் கருத்துகளைத்தான் தோழர் பெ.ம. மறுக்கிறாரா? அல்லது, விவாதத்துக்குரிய கட்டுரையில் தோழர் பெ.ம. மறுத்து வாதிடும் கருத்துகளைத்தான் நான் **ஈழமுரசில்** சொல்லியிருக்கிறேனா?

கட்டுரையின் தொடக்கத்திற்கே திரும்பிச் செல்வோம் --

இன்றைய காலகட்டத்தில் தேசியத் தன்னுரிமைப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் பங்கெடுக்கலாம், ஆனால் அப்போராட்டத்தை கம்யூனிஸ்டுக் கட்சி நடத்தக் கூடாது -- **இது என் கருத்தன்று. இப்படி ஒரு கருத்தை *ஈழமுரசு* ஏட்டில் நான் சொல்லவும் இல்லை. சொல்லியிருந்தால் அதை ஆதாரத்துடன் சுட்டிக்காட்டும்படி பெ.ம. அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.**

கம்யூனிஸ்டுக் கட்சி ஒரு வர்க்கத்தின் கட்சி, தேசிய இனப் போராட்டமோ பல வர்க்கங்கள் கலந்து கொள்ளக் கூடிய ஒட்டுமொத்த தேசிய இன எழுச்சி. தொழிலாளி வர்க்கத்திற்கு உரிய கம்யூனிஸ்டுக் கட்சி முன்னின்று தேசியப் போராட்டம் நடத்தினால் மற்ற வர்க்கங்கள் அதில் கலந்து கொள்ளத் தயக்கம் காட்டும், விருப்பமின்மை ஏற்படலாம். இந்த நிலை தேசியத் தன்னுரிமைப் போராட்ட வளர்ச்சிக்குத் தடையாய் அமையும். -- **இதுவும் என் கருத்தன்று. இப்படி ஒரு கருத்தை *ஈழமுரசு* ஏட்டில் நான் சொல்லவும் இல்லை. சொல்லியிருந்தால் அதை**



படிப்பகம்

www.padippakam.com

**ஆதாரத்துடன் சுட்டிக்காட்டும்படி பெ.ம. அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.**

கட்டுரையின் முதல் பகுதியில் பெ.ம. எழுதுகிறார் --

***''தொழிலாளிகள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளிகள், மூளை உழைப்பு ஊழியர்கள், பேராசிரியர்கள், விஞ்ஞானிகள், கலைஞர்கள், பெரு முதலாளிகள் அல்லாத நடுத்தர, சிறு முதலாளிகள், வணிகர்கள் போன்ற சமூகத்தின் பல்வேறு மக்கள் பிரிவினர்க்கும் உரிய கட்சியாகும் கம்யூனிஸ்ட் கட்சி. இதை தொழிலாளி வர்க்கத்தினருக்கு மட்டும் உரிய கட்சியென்றோ அல்லது தொழிலாளிகளுக்கு மட்டும் உரிய கட்சியென்றோ சித்திரிப்பது உண்மைக்குப் புறம்பானது''***

தோழர் பெ.ம.வின் இந்தக் கூற்றை அவரது கட்டுரையின் தொடக்கத்தோடு தொடர்புபடுத்திப் பார்க்கிற எவருக்கும்... மேற்கண்ட உண்மைக்குப் புறம்பான சித்திரிப்பைத் தரும் வில்லன் நானே எனத் தோன்றும். **அய்யா, தெரியாதய்யா, இந்தச் சித்திரிப்புக்கும் எனக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. கம்யூனிஸ்டுக் கட்சி தொழிலாளர்களுக்கு மட்டுமே உரிய கட்சி என்று நான் சொன்னதில்லை, எழுதியதில்லை, எண்ணியதுமில்லை.**

பெ.ம. எழுதுகிறார் :

***''ஒட்டுமொத்த சமூக அமைப்பையும் மாற்றியமைக்கப் போராட வேண்டிய கம்யூனிஸ்டுக் கட்சியை ஒரு வர்க்க நலனுக்கு மட்டும் உரிய கட்சி என்றும் இதனால் பிற வர்க்கப் பிரிவுகள் கம்யூனிஸ்டுக் கட்சியை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்றும் பேசுவது, ஒன்று மார்க்சியத்தை உரியவாறு புரிந்து கொள்ளாமல் இருப்பதாகும் அல்லது மார்க்சியத்தை சிதைத்து அறிமுகம் செய்வதாகும்.''***

நல்லவேளை, நான் பிழைத்துக் கொண்டேன்! மார்க்சியத்தை உரியவாறு புரிந்து கொண்டுள்ளேன், அதை நான் சிதைத்து அறிமுகம் செய்யவுமில்லை என்று நிம்மதியாக உள்ளது. ஏனென்றால் **கம்யூனிஸ்டுக் கட்சியை ஒரு வர்க்க நலனுக்கு மட்டும் உரிய கட்சி என்றும், இதனால் பிற வர்க்கப் பிரிவுகள் கம்யூனிஸ்டுக் கட்சியை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றும் நான் பேசியதில்லை, எழுதியதில்லை, எண்ணியதுமில்லை.**

கட்டுரையின் இரண்டாம் பகுதியில் பெ.ம. எழுதுகிறார் :

***''தேசம், தேசிய இனத் தன்னுரிமை ஆகியவை பற்றி இவ்வளவு அக்கறை கொண்ட கம்யூனிஸ்டுக் கட்சி முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையே உள்ள பொருளியல் முரண்பாட்டில்தான் அக்கறை செலுத்தும் என்பதை அடிப்படைக் கருத்தாக ஒருவர் வைத்துக் கொண்டிருந்தால் அது கற்பனைதவிர வேறல்ல''***

சரி, மெத்தச் சரி! ஆனால் நீங்கள் குறிப்பிடும் **அந்த ஒருவர் யானல்லேன்!**

தோழர் பெ.ம. அழகுபடச் சொல்கிறார் :

***''பூவை விரும்புவோர் பூமாலையை விரும்ப மாட்டார்கள் என்பது போல, நூலை விரும்புவோர் ஆடையை விரும்ப மாட்டார்கள் என்பது போல, வேரை விரும்புவோர் மரத்தை விரும்ப மாட்டார்கள் என்பது போல, வாழைப் பழத்தை விரும்புவோர் வாழைத் தாரை விரும்ப மாட்டார்கள் என்பது போல, 'கம்யூனிஸ்டுகளை' ஏற்றுக் கொள்வோர் கம்யூனிஸ்டுக் கட்சியை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற வாதம் அமைந்துள்ளது.''***

வாதத்தைச் சொன்னீர்கள், வாதியைச் சொல்ல வேண்டாமா? **''நீதான்'' என்பீர்களானால் திட்டவட்டமாக மறுக்கிறேன்.**

எந்தவொரு தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் கம்யூனிஸ்டுக் கட்சி தேவையில்லை என்ற பொது அறிவிப்பை மார்க்சின் **மூலதனத்தை** தமிழாக்கம் செய்தவனிடமிருந்து எப்படி எதிர்பார்த்தீர்கள்? இதற்குத் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர்தான் விளக்கம் தர வேண்டும்.

**எவற்றை என் கருத்துகள் என்று எடுத்துக்காட்டித் தோழர் பெ.ம. சாடுகிறாரோ, அவை என் கருத்துகளே அல்ல என்பதுதான் உண்மை.**

எஞ்சி நிற்பது ஒரே ஒரு கேள்விதான் : **ஈழமுரசு** ஏட்டில் நான் வெளியிட்ட கருத்துகளை தோழர் பெ.ம. தவறாகப் புரிந்து கொண்டிருக்க வாய்ப்புண்டா?

இந்தக் கேள்விக்கு விடைகாண வேண்டுமானால் **ஈழமுரசு** ஏட்டில் அப்படி என்னதான் கருத்துச் சொன்னேன் என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

***(தொடரும்)***



படிப்பகம்

www.padippakam.com

# கு.ச. ஆனந்தன் நினைவுகள்...

அந்த முதல் சந்திப்பு நிகழ்ந்து சில ஆண்டுகள் ஆயிற்று.

அப்போது 'இனி' வந்து கொண்டிருந்தது. கோபி நண்பர்கள் 'இனி'க்காக ஆண்டுக் கட்டணங்கள் கிட்டத்தட்ட 20,000/-- ரூபாய் அளவுக்குத் திரட்டி அதை நம்மிடம் ஒப்படைப்பதற்காக ஒரு நிகழ்ச்சியை நடத்தினார்கள். அந்த 'இனி' வாசகர் வட்ட நிகழ்ச்சிக்கு பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த இன உணர்வாளர்கள் வந்திருந்தார்கள். பேசுவதற்கு நானும் சுபவீயும் சென்றிருந்தோம்.

கூட்டத்திற்கு வந்திருந்த பெரும்பாலானவர் களைத் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரியாது. தேசிய இன சுயநிர்ணய உரிமை பற்றி நான் விரிவாகப் பேசினேன். தமிழ்த் தேசத்தை இந்திய நாட்டில் ஒரு மாநிலமாகக் குறுக்கிப் பார்ப்பவர்களையும், மாநில சுயாட்சி, மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் என்று கோரிக்கை வைப்பவர்களையும் வன்மையாகச் சாடினேன்.

பேசி முடித்த பின், நண்பர்கள் ஒவ்வொருவராக வந்து கைகுலுக்கி அறிமுகம் செய்து கொண்டார்கள். நண்பர் தமிழரசு என்னிடம் ஒருவரை அறிமுகம் செய்து வைத்து, ''இவர்தான்... அய்யா கு.ச. ஆனந்தன்'' என்றார். ''மாநில சுயாட்சி பற்றி நூல் எழுதியவர்களா?'' என்று கேட்டுக் கொண்டே கைகுலுக்க, ''ஆம், நான்தான்'' என்று சிரித்துக் கொண்டே பதிலளித்தார்.

எனக்கு தர்மசங்கடமாகி விட்டது. அவர் தொடக்கத்திலிருந்தே முன் வரிசையில் உட்கார்ந்து எங்கள் உரைகளை கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்திருந்தேன். 'இவரை எதிரில் வைத்துக் கொண்டு மாநில சுயாட்சிக் கோரிக்கையை இவ்வளவு காட்டமாக தாக்கியிருக்க வேண்டாம்' என்று நினைத்தேன். ஆனால் அவரோ கொஞ்சங்கூட தயங்காமல் சொன்னார் :

''நீங்கள் பேசியதுதான் சரி. உங்களால் முழுமை யாகப் பார்க்க முடிகிறது. நாங்கள் அரைகுறையாக நின்று விட்டோம்''

எனக்கு ஆறுதலாகவும், நிம்மதியாகவும் ஆனந்த மாகவும் கூட இருந்தது. அங்கேயே அப்போதே அவர் எனக்கு ஒரு பெரிய புத்தகத்தைப் பரிசாகக் கொடுத்தார் -- அவர் எழுதிய 'மலர்க மாநில சுயாட்சி' என்ற பெருநூல்!

ஆனந்தனின் நூலை படிக்கப் புகுந்த போதுதான் புரிந்து கொண்டேன்... அது இந்திய அரசமைப்பின் தேசிய இன ஒடுக்குமுறைக் குணத்தைத் தோலுரித்துக் காட்டி, தேசிய இன உரிமைப் போராட்டங்களுக்கு நியாயம் சொல்லும் நூல் என்பதை! பெயருக்கு மட்டும்தான் அது 'மாநில சுயாட்சி' நூல் என்பது அடியேனின் பணிவான கருத்து.

கோபியில், 'இந்தியாவில் தேசிய இனங்களும் தமிழ்த் தேசியமும்' என்ற அவரது நூலுக்கும் என் சுவருக்குள் சித்திரங்களுக்கும் சேர்த்து அறிமுகக் கூட்டம், 98 அக்டோபர் 22இல் நடைபெற்றது. அன்றிரவு கூட்டம் முடிய நெடுநேரம் ஆகிவிட்ட போதிலும் அவர் என்னையும் கோவை ஞானி, ஏ.ஜி. கஸ்தூரிரங்கன் முதலான தோழர்களையும் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று அன்புடன் விருந்தோம்பினார்.

ஈரோட்டில் தமிழ் வழிபாட்டு உரிமைக்காக நடைபெற்ற ஒருநாள் அடையாளப் பட்டினிப் போராட்டத்தின் போது நான் அவரைக் கடைசியாகப் பார்த்தேன். அங்கு அவர் தமிழ் வழிபாட்டுக்கு ஆதரவாக வரலாற்று, இலக்கியச் சான்றுகள் காட்டிப் பேசிய போது வியந்து போனேன். அவ்வளவு செய்திகள்!

சட்டத் துறை அறிஞராகிய கு.ச. ஆனந்தன் திருக்குறள் பேரறிஞராகவும் விளங்கினார் என்பதை அறிவேன். அவரின் குறளாய்வு எழுத்துகளை இனிமேல்தான் நான் படிக்க வேண்டும்.

கடந்த 2--11--99இல் யாரும் எதிர்பாராமல் திடீரென அவர் இறந்து போனார். தொடர்ந்து புகை உறிஞ்சும் பழக்கமுடைய அவரைப் புகையே உறிஞ்சி விட்டதோ? என்று தோழர் ஒருவர் கேட்டதில் உண்மை இருக்கலாம். ஆனந்தனைப் போன்ற அறிஞர்கள், சமூக உணர்வாளர்கள் தாங்களே தங்கள் உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்ளாமல் இருக்கலாம் எனத் தோன்றுகிறது. அவர்களின் வாழ்நாள் அவர்களுக்கே சொந்தமில்லை என்பதால் இப்படிக் கேட்க நமக்கு உரிமை இருப்பதாக நினைக்கிறேன்.

திரு கு.ச. ஆனந்தனைப் பற்றி என்னைப் போன்றவர்களுக்கு அடிக்கடி எழுகிற கேள்வி -- இவர் தி.மு.கழகத்தில் இருப்பது ஏன்? எப்படி? இந்தக் கேள்வியை நேரில் கேட்கும் அளவுக்கு அவருடன் நான் நெருங்கிப் பழகவில்லை. கோவை ஞானி ஒருவேளை கேட்டிருக்கலாம், எனக்குத் தெரியாது.

எனக்கு நானே சொல்லிக் கொள்ளும் விடை இதுதான். கு.ச. ஆனந்தனைப் போன்ற அறிஞர்கள் நம்பிக்கை கொள்ளும் அளவிற்கு கொள்கை வழிப்பட்ட தமிழ்த் தேசிய மற்றும் சமூக நீதி இயக்கங்கள் வலுப்பெறவில்லை. வெறும் கருத்து வலிமை போதுமென்று அவர்கள் எண்ணவில்லை போலும்.

திரு. கு.ச. ஆனந்தன் மறைந்த செய்தியை தோழர் கோ.வெ. குமணன் தொலைபேசியில் அழைத்துச் சொன்ன போது நான் ஊரிலில்லை. பிறகு செய்தியறிந்து ஆழ்ந்த வருத்தமுற்றேன்.

அறிஞர் கு.ச. ஆனந்தனுக்குத் தமிழ் தமிழர் இயக்கத்தின் சார்பிலும், தமிழ்த் தேசம் ஏட்டின் சார்பிலும் புகழாஞ்சலி செலுத்த விழைகிறேன். அவருடைய குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்கிறேன்.

-- தியாகு



படிப்பகம்

www.padippakam.com

## பேரணி விளக்கப் பொதுக்கூட்டம்

சென்ற நவம்பர் 17 புதன்கிழமை மாலை திருவள்ளூர் மாவட்ட தமிழ் தமிழர் இயக்கம் சார்பில் மரண தண்டனை எதிர்ப்புப் பேரணி விளக்கப் பொதுக் கூட்டம் அம்பத்தூரில் நடைபெற்றது. தோழர் சௌ. சுந்தரமூர்த்தி தலைமை வகித்தார். தோழர் ந. சண்முகம் முன்னிலை வகித்தார். இயக்கத்தின் மாவட்டச் செயலாளர் தோழர் அன்பு தென்னரசன் உரையாற்றினார். மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரு. ஜே. ஜோசப் யூஜின் கலந்து கொண்டு உரையாற்றினார். தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் மாவட்டச் செயலாளர் தோழர் அ. பத்மநாபன் பேசினார். ராசீவ் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப் பெற்று, மேல் முறையீட்டில் உச்சநீதி மன்றத்தால் விடுவிக்கப் பெற்ற தோழர் இரும்பொறை எவ்வாறு ராசீவ் கொலை வழக்கில் புலனாய்வும் விசாரணையும் நடத்தப்பட்டன என்பதை விளக்கிப் பேசினார்.

மருத்துவர் தாயப்பன், பொதுச் செயலாளர் தோழர் தியாகு, தலைவர் தோழர் சுப. வீரபாண்டியன் ஆகியோரும் உரையாற்றினர். தோழர் வே. மோகன் ராம் நன்றியுரைத்தார்.

## நாமக்கல்லில் ஆய்வரங்கம்

சென்ற நவம்பர் 12 வெள்ளிக் கிழமை மாலை நாமக்கல்லில் தமிழ் இயக்கக் கூட்டமைப்பின் சார்பில் 'இனியும் வேண்டாம் மரண தண்டனை!' என்ற தலைப்பில் ஆய்வரங்கம் நடைபெற்றது. திருச்செங்கோடு மருத்துவர் பழ. பாலகிருஷ்ணன், கரூர் வழக்கறிஞர் பூ.அர. குப்புசாமி (காவிரி காப்புக் குழு) ஆகியோர் உரையாற்றிய பின் பொதுச் செயலாளர் தோழர் தியாகு மரண தண்டனை எதிர்ப்பு ஆய்வுரை நிகழ்த்தினார். திரு நா. ப. இராமசாமி, புலவர் ப. சுப்பண்ணன் ஆகியோர் இந்நிகழ்ச்சியைச் சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தார்கள். தோழர் தியாகுவின் உரையை மறுநாள் தினமணி நாளேடு (உள்ளூர்ப் பதிப்பு) விரிவாக வெளியிட்டிருந்தது.

## மேச்சேரியில் பொதுக் கூட்டம்

சேலம் மாவட்டம் மேச்சேரியில் முதல் தமிழ் தமிழர் இயக்கப் பொதுக் கூட்டம் சென்ற நவம்பர் 12 வெள்ளி இரவு நடைபெற்றது. தோழர் தம்பி பழனிச்சாமி தலைமை வகித்தார். நாமக்கல் மாவட்டச் செயலாளர் தோழர் சேகர், ஈரோடு மாவட்டச் செயலாளர் தோழர் ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தோழர் தியாகு நிறைவுரையாற்றினார். இந்தப் பொதுக்கூட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு மாற்று இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் இயக்கம் சாராத தமிழ் உணர்வாளர்களும் பேருதவி புரிந்தார்கள்.

## சூலூரில் சிறப்புக் கருத்தரங்கம்

சூலூர் பாவேந்தர் பேரவை சார்பில் சென்ற நவம்பர் 14 ஞாயிறு காலை சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது. சூலூர் தமிழ் மழலையர் பள்ளியின் தாளாளர் திரு. கு.ர. தங்கவேலு தலைமை வகித்தார். ''தாய்த் தமிழ் கல்வி... இலக்குகள் -- இடையூறுகள்'' என்ற தலைப்பில் தோழர் தியாகு உரையாற்றினார். தமிழறிஞரும் கோபியைச் சேர்ந்த வழக்கறிஞரும் ஆகிய திரு. கு.ச. ஆனந்தன் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப் பட்டது. தோழர் செந்தலை கௌதமன் திரு. கு.ச. ஆனந்தனின் சிறப்பியல்புகளையும், இலக்கியப் படைப்புகளையும், தமிழியக்கப் பங்களிப்புகளையும் எடுத்துரைத்தார். திரு. ஆனந்தனின் புதல்வரும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்று, தந்தையாரின் நினைவுகளை பகிர்ந்து கொண்டார்.

## கோவையில் பேரவை

தமிழ் தமிழர் இயக்கத்தின் கோவை மாவட்டப் பேரவைக் கூட்டம் சென்ற நவம்பர் 11 வியாழன் மாலை மாவட்டச் செயலாளர் தோழர் க. தேவேந்திரன் அவர்களது இல்லத்தில் நடைபெற்றது. தோழர் கதிர்முருகன் தலைமை வகித்தார். சென்னையில் நடைபெறவிருக்கும் மரண தண்டனை எதிர்ப்பு மனித உரிமைப் பேரணியில் பெருந்திரளாகக் கலந்து கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. கோவை மாவட்டத்தில் உள்ள தமிழ் உணர்வாளர்களும் மனித உரிமைப் பற்றாளர்களும் பெருந்திரளாகப் பேரணிக்கு வர வேண்டுமெனப் பேரவை கேட்டுக் கொண்டது. இந்தியத் தொலைபேசித் துறை தொலைபேசிக் கருவிக்கான வாடகைத் தொகையை செங்குத்தாக உயர்த்தி ரூ. 500 ஆக்கியிருப்பதைக் கண்டித்து வாடகைத் தொகையைக் குறைக்கும்படி பேரவை கேட்டுக் கொண்டது.

**உறை பனிக் காட்டில் ஈழ நெருப்புடன்...**
தொடர்
இடம் போதாமையால் இவ்விதழில் இடம்பெறவில்லை.
உறுதியாக அடுத்த இதழில் இடம்பெறும்.
- ஆசிரியர்


**தமிழ்த் தேசம்**
ஆண்டு நன்கொடை ரூ. 60/-
பணம் அனுப்ப வேண்டிய முகவரி :
தமிழ்த் தேசம்
அறை எண் 3, முதல் மாடி, 242, என்.எஸ். கிருஷ்ணன் சாலை, (ஆற்காடு சாலை), வடபழனி, சென்னை - 600 026.



**முதல் அடி!**
தன்னுரிமை, சமூக நீதி விவாதக் குறிப்புகள் ஆழ்ந்து சிந்தித்து எழுதப்பட்டுள்ளன. தமிழ்த் தேசிய சமூக நீதிக் குடியரசை அடைய நீண்ட பயணம் மேற்கொள்ள வேண்டுமென்றாலும் முதல் அடி எடுத்து வைத்து விட்டோம் என்று மகிழ்ச்சி கொள்ளலாம்.
- கோ. இரத்தினவேல், நெய்வேலி.




படிப்பகம்

www.padippakam.com

## பொருளாளர் அறிக்கை :

# இயக்கப் பெருநிதி விரைந்து அனுப்புவீர்!

தோழர்களே! நமது இயக்கத்தின் அம்பத்தூர் பேரவையில் ஒப்புக் கொண்டவாறு இயக்கப் பெருநிதிக்கான உங்கள் பங்களிப்பை சுணக்கமின்றி விரைந்து அனுப்ப வேண்டுகிறேன்.

**க. தேவேந்திரன்**
பொருளாளர்
தமிழ் தமிழர் இயக்கம்

**பணம் அனுப்ப வேண்டிய முகவரி :**
**க. தேவேந்திரன்**
**18-சி-2, ரயில்வே பீடர் சாலை,**
**பெரியநாயக்கன்பாளையம்,**
**கோவை - 641 020.**
**தொலைபேசி : 0422-892688.**

## முகிலன் -- பாலசுந்தரி வாழ்க!

நெய்வேலியைச் சேர்ந்த தமிழ் தமிழர் இயக்கத் தோழர் ரெ. ரமேஷ் என்கிற ரெகு. முகிலனுக்கும் செல்வி பாலசுந்தரிக்கும் வாழ்க்கைத் துணை நல ஒப்பந்த விழா 31--10--1999 ஞாயிறு காலை நெய்வேலியில் இனிது நடைபெற்றது. இயக்கத் தலைவர் தோழர் சுப. வீரபாண்டியன் தலைமை யேற்று மணவிழாவை நடத்தி வைத்தார். மணமக்கள் சார்பில் தமிழ்த் தேசம் ஏட்டிற்கு ஓராயிரம் ரூபாய் நன்கொடை வழங்கப் பெற்றது. நன்றி! வாழ்க மணமக்கள்!

*

## நன்கொடைக்கு நன்றி!

சென்ற (அக்டோபர் 99) இதழில் தமிழ்த் தேசத்திற்கு நன்கொடையும் அனுப்பலாம் என்று நினைவூட்டியிருந்தேன். அதையே வேண்டுகோளாக ஏற்று, நண்பர் ஒருவர் மூலமாக உதகை கார்த்திகேயன் ரூ. 600/-- அனுப்பி வைத்துள்ளார். மிக்க நன்றி!

*- தியாகு*



# படிப்பாளர் பக்கம்

அக்டோபர் தமிழ்த் தேசம் இதழ் சிறந்த வடிவமைப்புடன் வந்துள்ளது. இது தொடரட்டும். குடியரசுத் தலைவருக்குத் தங்களின் திறந்த மடல் மரண தண்டனை மாண்டொழிய உதவட்டும்.

-- *கோ. இரத்தினவேல், நெய்வேலி.*

தமிழ்த் தேசம் அக்டோபர் இதழ் பார்த்தேன். பக்கத்திற்குப் பக்கம் கருத்துகள் என் மூளையில் பதிவாயின. 'குடியரசுத் தலைவருக்கு ஒரு முன்னாள் தூக்குக் கைதியின் திறந்த மடல்', மற்றும் கவிதைகள் அருமை!

-- *பூ. இனியன் பாபு, விருத்தாச்சலம்.*

தமிழ்த் தேசம் வடிவம், உள்ளடக்கம் கனமாக வருகிறது. மகிழ்ச்சி!

-- *இரா. காமராசு, மன்னார்குடி -- 614 001.*

டான் பிரீனின் அயர்லாந்து விடுதலைக்கான எனது போராட்டம் தொடரைப் படித்தேன். புரட்சியாளர்களுக்கு இன்னல்கள், இடையூறுகள், துன்பங்கள், துயரங்கள் ஏற்படுவது இயல்பு. ஆயினும் அனுபவரீதியில் எழுதியிருப்பது சிறப்பு. ஆசிரியர் எழுதப் போகும் 'தேசிய விடுதலைப் போராட்டத்தைக் கம்யூனிஸ்டுக் கட்சியும் நடத்தலாம்' ஆய்வுக் கட்டுரையைப் படிக்க ஆவலாக உள்ளேன். அதில் என் சந்தேகங்களுக்குத் தீர்வு கிடைக்குமென உறுதியாக நம்புகிறேன்.

-- *தமிழ்க்கதிர், சென்னை - 44.*

முன்னாள் தூக்குக் கைதியின் மடல் கண்டேன். ஏதோ ஒரு காரணத்தால் கொலை செய்து விடுகின்றனர். திருந்தி வாழ நினைக்கும் போது அவர்களைத் தூக்கிலிடுவது சரியன்று. மாணிக்கம் செட்டியார், சுப்பையா கவுண்டர் போன்றவர்களின் குறிப்புகளை ஒப்பிட்டு எழுதியது தூக்குத் தண்டனைக்கு எதிரான போராட்டத்திற்குத் துணை செய்யும்.

-- *செ. கோவிந்தராசன், திருச்சி - 21.*

இன உணர்வைப் பிறருக்கு எடுத்துரைக்க எண்ணும் நாம், மொழி உணர்வை ஊட்டிட முயலும் நாம் வடமொழிக்கு இடம் கொடுக்கலாமா? இதழின் பெயரை இன உணர்வு கொண்டு மாற்றிட வேண்டுகிறேன். இதழில் வரும் கட்டுரைகளில் வடமொழியின் ஆதிக்கம் நிறையவே நிரம்பியிருக்கிறது.

-- *கற்பூரம் நா. நாகராசன், மதுரை 10.*

(**தமிழ்த் தேசம்** என்பது வடமொழிப் பெயர் அன்று. 'தேயம்' மருவி 'தேசம்' ஆயிற்று. தமிழ்த் தேசம் என்பது ஏட்டின் பெயராகவும் நாட்டின் பெயராகவும் இருப்பதோடு, இந்திய தேசியத்துக்கு -- இந்தியாதான் தேசம் என்பதற்கு எதிராக உயர்த்தப்படும் போர்க்கொடியாகவும் விளங்குகிறது. இந்தப் பெயரால் மொழி, இன உணர்வுகள் குறைந்து போக மாட்டா. மாறாக இப்பெயர் அவ்வுணர்வுகளை வளர்க்கக் கூடியதாகும். இதழில் வரும் கட்டுரைகளில் பிறமொழிக் கலப்பைக் குறைக்க வேண்டும், இயன்ற வரை தவிர்க்க வேண்டும் என்பதே எமது அவா. அதேபோது தனித்தமிழில் மட்டுமே கட்டுரைகள் வெளியிடுவது தமிழ்த் தேசம் ஏட்டின் கொள்கையன்று.

-- ஆசிரியர்)

'**தமிழ்த்தேசம்** - இதழ் அட்டையிலிருந்து அச்சு வரை தரம் உயர்ந்துள்ளதை வரவேற்கிறோம். மாதந்தோறும் தவறாமல் வெளியிடுவதற்கும் முயற்சி செய்யுங்கள்.

-- *ந. அப்துல்ரகுமான், ஆங்காங்.*



படிப்பகம்

www.padippakam.com

# தெய்வ மொழியும் மக்கள் மொழியும்

மொழி என்பது இன அடையாளத்தின் முக்கியக் கூறுகளில் ஒன்று. ஆகவேதான் அது ஆவேச உணர்ச்சிக்கும் கருத்து மோதலுக்கும் ஆர்வ விடிவுக்கும் முக்கிய நிலைக்களன் ஆகிறது. அனேகமாய் உலகிலேயே மிகப் பல பண்பாடுகளைத் தன்னகத்தே கொண்ட நாடு இந்தியாவாகத்தான் இருக்கும். இந்நாடு பற்பல மொழிகளின் உறைவிடமாக இருப்பதை நற்பேறு எனக் கொண்டாலும் சரி, சாபக்கேடு எனக் கொண்டாலும் சரி. இந்த மொழிகளில் சமஸ்கிருதம் தெய்வமொழியாகக் கருதப்படுகிறது. விண்ணுலகிலும் மண்ணுலகிலும் தெய்வத் தன்மை பொருந்தியவர்களின் குறியீடாக உள்ளது. இதற்கு மாறாக தமிழ் மொழியோ தொன்றுதொட்டு பெரிதும் மக்களுக்குரிய இலக்கியம் படைத்த மொழி என்னும் பெருமை கொண்டது. சங்க நூல்களையும் திருக்குறளையும் சான்றாகக் குறிப்பிடலாம். 'பிராகிருத' மொழிகள் என்பவை இந்தியப் பரப்பெங்கும் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சமானிய மக்கள் பேசி வந்த மொழிகளுக்குத் தரப்பட்டுள்ள தவறான பொதுப் பெயர் ஆகும். 'பிராகிருதம்' என்பதில் பௌத்தர்கள் மற்றும் சமணர்களின் சமய இலக்கியமும் உண்டு. தொடக்க கால மஹாராஷ்டிரிய மொழியில் கதசப்தசதி எழுதிய காமரசம் பொங்கும் பாட்டுகளும் உண்டு. பின்னவை அப்பட்டமாகவே உலகியல் சார்ந்தவை.

சமஸ்கிருதம் அதன் தாசர்களுக்கு தெய்வ மொழி மட்டுமல்ல, அதற்கும் மேலானது. அது தேவலோகத்துக் குரியது மட்டுமல்ல, இந்து-இந்தியப் பண்பாட்டின் மையக் கருவுமாகும் என்று அவர்கள் கருதுகிறார்கள். தொடக்க கால இந்தியச் சமூகவியல் அறிஞர் எம்.என். சீனிவாஸ் கருத்துப்படி, 'சமஸ்கிருத மயமாக்கம்' என்ற சொல் கீழ்ச்சாதிகள் மேட்டுக்குடி இந்தியர்களை அடையாளப் படுத்தும் சமூகத் தராதரங்களை நோக்கி நகர்வதை குறிக்கும். இப்போதுள்ள பாரதீய சனதா கட்சி அரசாங்கத்தின் பார்வையில் சமஸ்கிருதம் என்பது இந்திய நாட்டுக் குழந்தைகள் எல்லோரும் கூடிய விரைவில் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு மொழியாகும், மெய்யாகவே அவர்களின் இந்தியத் தன்மையை உறுதி செய்யப் போகிற ஒரே மொழியாகும். சமஸ்கிருதம்தான் மிகத் தொன்மையான மொழி, ஆரியர்களுக்கு மட்டுமல்லாமல் சிந்துவெளி நாகரிகத்திற்கும் சொந்தமான மொழி என்று பிடிவாதமாய்ப் பெருமை பேசக் கூடியவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

பெங்களூரில் ஓய்வு பெற்ற கணினி அறிவியலாளராக இருக்கும் என்.எஸ். ராஜாராமும், மேற்கு வங்கத்தின் பழம்பெரும் வேத வித்தகர்களில் ஒருவரான நட்வர் ஜாவும் எழுதிய ஒரு நூலில், வேதிய சமஸ்கிருதம்தான் சிந்துவெளி நாகரிகத்தின் மொழியாக இருந்தது என்ற வாதம் இடம் பெற்றுள்ளது. ஆரியர்கள் வெளியில் இருந்து வந்தவர்கள் அல்ல, உள்ளபடியே இந்தியாவில் தோன்றியவர்கள்தான் என்ற (இப்போது யாவருமறிந்த) இந்துத்துவக் கருத்தை இந்நூலாசிரியர்கள் அடிப்படையாகக் கொள்கிறார்கள். ''ஆரியப் படையெடுப்பு என்பது ஐரோப்பிய அறிஞர்கள் தங்கள் சொந்த நன்மைக்காகக் கட்டி விட்ட கதையே ஆகும்'' என்பது இவர்களின் வாதம்.

சமஸ்கிருதத்திற்கும் ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையே மொழிவழித் தொடர்புகள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஓர் 'ஆரியக் கட்டுக் கதையே' பிறந்து விட்டது. ஐரோப்பியர்கள் பலரும் உண்மையான **கீழை** நாட்டுப் பாங்குடன் இந்தியாவின் ஆரியக் கடந்த காலத்தைப் போற்றிப் புகழ்ந்தார்கள். அதன் ஆன்மிகப் பாரம்பரியங்களை மிகையாக அலங்கரித்துச் சொன்னார்கள். **கீழ்த்**தரமான பழங்குடி மக்களினங்களை ஆரியர்கள் வெற்றி கொண்டதன் அடிப்படையில் சாதிக்கு விளக்கம் அளித்தார்கள். சமஸ்கிருதத்தையும் ஐரோப்பிய மொழிகளுடன் அதற்குள்ள தொடர்புகளையும் அறிந்த போது மாக்ஸ் முல்லர் போன்ற ஐரோப்பியர்களுக்குப் புல்லரித்தது. அதிலிருந்து 'இந்தோ -- ஐரோப்பிய' என்ற உரிச்சொல் புதிதாய்க் கண்டெடுத்த அடையாளத்தின்

**(கெயில் ஓம்வெத் இந்து நாளேட்டின் செப்டெம்பர் 19 இதழில் இந்தக் கட்டுரையை எழுதினார். ஆய்வுப் பொருளின் முக்கியத்துவம் கருதி காலந்தாழ்ந்தேனும் இதனைத் தமிழ்த் தேசத்தில் மொழிபெயர்த்து வெளியிடுகிறோம்)**

குறியீடாயிற்று. முல்லர் எழுதிய **கீழையுலகின் புனித நூல்கள்** என்ற நூல் சமஸ்கிருதத்தின் தெய்விகத் தன்மையை வலியுறுத்தியது. ஆனால் இந்த 'ஆரியக் கட்டுக் கதை' இந்தியாவிலும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. 19ஆம் நூற்றாண்டில் இந்திய மேட்டுக் குடியினர் இந்தக் கட்டுக் கதையைக் கையிலெடுத்துத் தங்கள் நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டார்கள். லோகமான்ய திலகரைப் போன்ற தலைவர்கள், ''வேதங்களின் ஆர்க்டிக் தாயகம்'' என்பதைப் பறைசாற்றினார்கள்.

''அறியப்படாத இந்தியர்களில்'' மிக அதிகமாய்ப் புகழ்பெற்ற காலஞ்சென்ற நீரத் சௌத்ரி தன் ஐரோப்பியத் தன்மையை அறிவித்துக் கொண்டார். இவ்வாறு ஆரியக் கட்டுக் கதையை ஏற்பது என்பதன் பொருள் ஐரோப்பியர் களுடன் சேர்ந்து அடையாளப்படுத்திக் கொள்வதன் மூலம் மேல்சாதி ஆதிக்கத்தை நியாயப்படுத்துவதே ஆகும். அதே போது ஆரியர் அல்லாத, 'தொல்குடி' மக்களினங்களாகிய சூத்திரர்களும் தலித்துகளும் ஆரியர் அல்லாத கறுப்புப் பெரும்பான்மையாகக் கருதப்பட்டார்கள். பார்ப்பனரல்லா தார் இயக்கமும் தலித் இயக்கமும், முதலில் புலேயும் பிறகு திராவிட இயக்கமும், முடிவில் தலித் இயக்கமும் இருபது களில் வடஇந்தியாவிலேயே கூட இதைத் திருப்பியடித்துப் புரட்டிப் போட்டன. வெற்றி கொள்ளப்பட்ட ஆரியரல்லா தாருக்கு அறவொழுக்கப் பார்வையிலும் வரலாற்றுப் பார்வையிலும் முதன்மை கோரின. மேட்டுக் குடியினர்



படிப்பகம்

www.padippakam.com

தங்கள் வாதத்தை மாற்றிக் கொள்ள வேண்டியதாயிற்று. ஹெக்டேவருக்குப் பிறகு ஆர்.எஸ்.எஸ். தலைமைப் பொறுப்பிற்கு வந்த கோல்வால்கர், உண்மையில் ஆரியர்கள் இந்தியாவிலேயே தோன்றினார்கள் என்று 30களில் வாதுரைத்தார். ஆரியக் கதையின் இந்தத் திருத்திய வடிவம்தான் இன்று பெரும் பகுதி இந்துத்துவ சிந்தனைக்கு அடிப்படையாக அமைகிறது. ராஜாராமும் ஜாவும் எழுதியிருப்பது போன்ற போலிப் புலமை நூல்களுக்கு இந்தக் கதையே அடிப்படை ஆகிறது. இந்திய 'தேசிய ஒற்றுமைக்' கருத்தை சமஸ்கிருதம் மற்றும் ஆரியர்களே முதல் என்னும் உரிமைக் கோரிக்கையோடு இணக்கப்படுத்த முயலும் கருத்தியல் ஆகும் இது.

ஆனாலும் என்ன செய்வது? கட்டுக் கதைகள் களத்தில் அறிவியல் சான்றுகளுக்கு முகம் கொடுத்தாக வேண்டும். எல்லாக் கட்டுக் கதைகளையும் ஒன்றேபோல் பார்க்க முயலும் பின்--நவீனத்துவப் போக்குகளுக்கு மாறாக, இந்தச் சிக்கல் குறித்து தெளிந்த சான்று உள்ளது. பொதுவாக 'இந்தோ--ஐரோப்பிய' மக்களினங்கள் என்று அழைக்கப் படுவோரில் சில பிரிவினர் கி.மு. 1500க்கு சற்றே முன்னதாக ஈரானிலிருந்து புலம்பெயர்ந்து இந்தியாவிற்குள் நுழைந்ததை கருத்துச் சிரத்தையுள்ள அறிஞர்கள் யாரும் மறுக்க மாட்டார்கள் என்பதே உண்மை. அவர்கள் பேசிய மொழி -- பிற்காலத்தில் உயர்தனி சமஸ்கிருதம் ஆகவிருந்த மொழி -- ஐரோப்பிய மொழிகளோடு உறவு கொண்டிருந்தது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். அவர்களது மொழியே சிந்துவெளி நாகரிகத்தின் மொழியாகவும் இருந்தது என்று இப்போது சொல்லப்பட்டு வரும்

**உலகிலேயே மிகப் பல பண்பாடுகளைத் தன்னகத்தே கொண்ட நாடு இந்தியாவாகத்தான் இருக்கும்.**

இந்துத்துவக் கருத்தையும் இந்தியாவுக்கு வெளியே யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

இந்த 'வேதிய ஆரியர்கள்'தான் உள்ளபடியே சிந்துவெளி நாகரிகத்தை அழித்தார்களா? என்பது பற்றி இன்று வரை விவாதம் உண்டு. அந்நாகரிகத்தின் வீழ்ச்சிக்கு உயிரினச் சூழலின் அழிவே முதன்மைக் காரணியாக அமைந்தது என்று பல புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் வாதிடுகிறார்கள். ஒரே ஒரு பெரும்படியான ஆரியப் 'படையெடுப்பு' நிகழ்ந்தது என்ற கருத்தையும் பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்களும் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களும் மறுத்து வாதிடுகிறார்கள். பார்க்கப் போனால், ஆரியர்கள் மெல்ல மெல்ல அணிஅணியாகப் பல நூற்றாண்டுகளில் வந்து சேர்ந்ததாகப் பார்க்கிறார்கள். அடிப்படையில் வெவ்வேறான இரு ஆரிய அலைகளையே கூட அவர்கள் குறிப்பிடக்கூடும். முதல் அலை இந்தோ--ஐரோப்பிய மொழிகளின் 'வெளிவட்டம்' (மராத்தி, ஒரியா, வங்காளி) உருவாகக் காரணமாய் இருந்தது. பிறகு வந்த வேதிய அலை வட இந்திய மொழிகள் உருவாகக் காரணமாய் இருந்தது என்பார்கள். மொழிகள், இனக்குழுக்கள் ஆகிய இரு வகையிலுமே கலப்பு நிகழ்ந்துள்ளது.

ஆனால் அந்த நேரத்தில் வடமேற்கு இந்தியாவில் வாழ்ந்து வந்தவர்களைக் காட்டிலும் ஆரியர்கள் போர் நாட்டம் கொண்ட இனமாய் இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. தாங்கள் களத்தில் சந்தித்தவர்களில் பலரை விடவும் 'நாகரிகத்தில்' அவர்கள் குறைந்தே இருந்தார்கள் (நகரங்கள் கிடையாது, எழுத்து கிடையாது) என்பதில் ஐயமில்லை. படைக் கலன்களின் தொழில்நுட்பத்தில் மட்டுமே அவர்கள் மேம்பட்டு இருந்தார்கள் -- குதிரையும் வில் அம்பும் தேரும் இருந்தன. எப்படிப் பார்த்தாலும் சிந்துவெளி நாகரிகத்தின் மீதமிச்சங்களாய் விளங்கிய மக்களுக்கு எதிராக அவர்கள் சண்டையிட்டார்கள், அம்மக்களைக் கொடும் பகைவர்களாய்க் கருதினார்கள் என்பதிலும் ஐயமில்லை.

அசுரனாகிய விருத்திரனை இந்திரன் அழித்தது பற்றி ரிக் வேதத்தில் வழங்கும் கதைகள், மேய்ச்சல் தொழில் புரிந்து வந்த தந்தைவழி மக்களினம் ஒன்றுக்கும், நகரம் சார்ந்த தாய்வழி மக்களினம் ஒன்றுக்கும் இடையில் ஏற்பட்ட பெரும் வரலாற்று முரண்பாட்டுக்குச் சான்றாகும். ''வைலஸ்தனாகம் ஆகிய சிதலமுற்ற நகரத்தில், மகாவைலஸ்தம் ஆகிய சிதலமுற்ற நகரத்தில் சூனியக்காரிகள் கூட்டத்தை, ஓ மகவானே, அடித்து வீழ்த்து!'' என்பது போன்ற வாசகங்கள் ஆரியர்களுக்கும் அவர்கள் நுழைந்த மண்ணில் வாழ்ந்து கொண்டிருந்தவர்களுக்கும் ஏற்பட்ட மோதலைக் காட்டுவ தாக அல்ச்சின்ஸ் போன்ற புதைபொருள் ஆராய்ச்சியாளர் கள் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

முடிவில், சிந்துவெளி நாகரிகத்தின் முத்திரைகளில் காணப்படும் மொழி இன்னதென்று இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றாலும் அது திராவிட மொழிதான் என்பதும், ஆரியர் வந்து புகுந்த காலத்தில் வட இந்தியாவில் மூலத் திராவிட மொழிகள் வழங்கி வந்தன என்பதும் பொதுக்கருத்தாகும். மேலும் கருத்துக்குரிய செய்தி என்னவென்றால், தொடக்க காலத்தில் அறியப்பட்ட சமஸ்கிருத வடிவங்களிலேயே கூட திராவிட மொழிக் கூறுகளின் தாக்கத்திற்கு வலுவான மொழியியற் சான்று உள்ளது. (ஆஸ்திரேலிய -- ஆசிய வழி மொழிகளின் தாக்கம் குறைவாக இருந்தாலும் முக்கியமானதே எனலாம்.)

சமஸ்கிருதம் என்ற மொழியே திராவிட மொழி பேசும் மக்களோடு முரண்பாடு, சண்டை, போராட்டம் என்ற சூழலில்தான் பிறந்தது. வேதிய ஆரியர்கள் சமூகத் தொடர்பு மற்றும் மொழித் தொடர்பிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் தங்கள் மொழியின் தூய்மையைக் காத்துக் கொள்வதற்கும், அடிமைகள் அல்லது தாசர்களாகத் தங்களால் கருதப்பட்டவர்களின் பேச்சை இழித்துரைப்பதற் கும் முயன்றார்களே, அந்தச் சமூக நிகழ்முறையில்தான் சமஸ்கிருதம் உருவாயிற்று. மொழி என்பது இன அடையாளத்திற்கு மட்டுமல்லாமல் இனத் தூய்மைக்கும் ஒரு சின்னமாயிற்று. பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பிராங்க் சௌத்வர்த் போன்ற மொழி வல்லுநர்கள் சுட்டிக்காட்டியிருப்பது போல், வேதிய ஆரியர்கள் இத்தகைய போக்கினைக் கொண்டிருந்தபோதிலும், மொழியின் அடிப்படைக் கூறுகள் சிலவற்றின் மீது திராவிடத் தாக்கங்களை அவர்களால் தவிர்க்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அவை யாவை? ஐரோப்பிய மொழி பேசுவோர் இந்திய மொழிகளைக் கற்றுக் கொள்ளும்போது அந்த கூறுகளை எளிதில் கண்டு கொள்ள முடியும். பல் மற்றும் மேல் அன்னத்தைக் கொண்டு உச்சரிக்கும் முறையிலான வேறுபாடு இத்தகைய கூறுகளில் ஒன்றாகும். எளிமையாகச் சொன்னால், இந்திய மொழிகளில், 'ன', 'த'. 'ட' ஆகிய ஒவ்வொன்றிற்கும் இரண்டு எழுத்துக்கள் இருப்பதாகத் தெரிகிறது. (இராமாயணத்தில் வருகிற 'ண' எழுத்துக்கும் 'பானி' என்ற இந்தி வார்த்தையில் வருகிற 'ன' எழுத்துக்கும்



படிப்பகம்

www.padippakam.com

இடையிலான வேறுபாட்டை உதாரணமாகச் சொல்லலாம்.) என்னைப் போல் ஆங்கிலத்தையே தாயமொழியாகக் கொண்டு பேசுகிறவர்களுக்கு இந்திய மொழிகளில் இருக்கும் இந்த வேறுபாட்டைப் பேச்சில் வெளிப்படுத்துவதும், காதால் கேட்பதும் கூட மிகவும் கடினமாய் உள்ளது. இந்திய மொழிகளை 'இந்தோ--ஐரோப்பிய' மொழிகள் என்று வகைப்படுத்தினாலும் சரி, 'திராவிட' மொழிகள் என்று வகைப்படுத்தினாலும் சரி அவற்றின் அடிப்படையான ஒலிப்பியல் கூறுகளில் இதுவும் ஒன்று. இப்படி ஒரு கூறு எந்த ஐரோப்பிய மொழியிலும் இடம்பெறவில்லை. இந்தோ--ஐரோப்பியர்கள் இந்தியத் துணைக் கண்டத்திற்குள் வந்து நுழைந்த பிறகே இந்தக் கூறு சமஸ்கிருதத்திற்குள்ளும், சமஸ்கிருதத்திலிருந்து வரப்பெற்ற மொழிகளுக்குள்ளும் வந்து நுழைந்தது என்பது வெள்ளிடை மலை. அதன் திராவிடப் பிறப்பு தெளிவாய் தெரிகிறது. ஆகவே, வரலாற்று வழியில் சொல்வதென்றால், சமஸ்கிருதம் திராவிட மொழிகள் மீது தாக்கம் கொள்வதற்கு ஓராயிரம் ஆண்டு முன்பே திராவிட மொழிகள் சமஸ்கிருதம் மீது தாக்கம் கொண்டன.

'இந்தோ -- ஐரோப்பிய' மொழிகள் எனப்படுகிறவற்றில் பெரும்பாலானவற்றுக்கும் 'திராவிட' மொழிகளுக்கும் இடையே வேறு முக்கியமான ஒற்றுமைகள் உள்ளன. 'தெற்காசிய' மொழிக் குடும்பம் ஒன்று இருப்பதாக மொழி வல்லுநர்கள் அறுதியிட்டுரைக்க வழிகோலுமளவுக்கு இந்த ஒற்றுமைகள் முக்கியமானவை. இவற்றில் மிகவும் முக்கியமானது வாக்கிய அமைப்பில் காணப்படும் ஒற்றுமைதான். வினைச் சொல் வாக்கியத்தின் முடிவில் வருகிறது. வேற்றுமை உருபுகள் முன்னால் இடம் பெறுவதற்கு பதில் பின்னால் இடம்பெறுகின்றன. மராத்தி, இந்தி போன்ற மொழிகளின் வாக்கிய அமைப்புகள் அடிப்படையில் திராவிட மொழிக்குரியவை, ஐரோப்பிய மொழிகளிலிருந்து பெரிதும் மாறுபட்டவை. இந்தியர்கள் பேசும் போது, ''நான் ஊருக்குப் போகிறேன்'' என்று சொல்வார்களே தவிர, ''நான் போகிறேன் ஊருக்கு'' என்று சொல்ல மாட்டார்கள். இந்த வாக்கிய அமைப்பு வகைகள் சில நேரம் எளிமையானவை, சில நேரம் சிக்கலானவை, ஆனால் ஐரோப்பிய மொழிகளுடனான வேற்றுமைகளும், ஏனைய தெற்காசிய மொழிகளுடனான ஒற்றுமைகளும் அடிப்படையானவை.

இந்தக் காரணங்களைக் காட்டி, மராத்தி போன்ற மொழிகளுக்கு 'ஒரு திராவிட அடிநிலம்' இருப்பதாக மொழி வல்லுநர்கள் சொல்வார்கள். ஆனால் இது ஓர் அடிப்படைக் கேள்வியைத் தூண்டுகிறது: மராத்தி போன்ற ஒரு மொழி இலக்கணத்திலும் ஒலிப்பியலிலும் தமிழை ஒத்திருக்கிறது, சொல் வளத்தில் மட்டும் ஐரோப்பிய மொழிகளுக்கு நெருக்கமாய் உள்ளது என்றால் (பாரசிக மொழியிலிருந்தும் பல சொற்கள் வந்துள்ளன என்பது ஒரு புறம் இருக்கட்டும்), அதனை 'இந்தோ -- ஐரோப்பிய' மொழி என்று வகைப் படுத்துவது ஏன்? இன அடையாளத்தை வெளிப்படுத்தும் இத்தகைய சொல்லாட்சிகளின் வழியாகத்தான் 'திராவிடர் கள்' இந்தியாவின் வேறு ஒரு பகுதியான 'தெற்கில்' மட்டும் வாழ்கிறவர்கள் எனக் கருதுவதற்குச் சொல்லித் தரப்படுகிறது.

ஆக, திராவிட மொழிகள் சமஸ்கிருதத்தைக் காட்டிலும் பழமையானவை. மக்களுக்குரியது தெய்வத்துக்குரியதைக் காட்டிலும் முதன்மை கோர உரிமை உண்டு என்றே சொல்லி விடலாம். எடுத்துக்காட்டாக, மெசப்பொட்டாமிய மக்களினங்கள் சிந்துவெளி நாகரிகத்தைக் குறிக்க 'மெலுகா' என்ற சொல்லைப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. இந்தச் சொல்லிலிருந்தே மிலேச்சர் என்ற சொல்லும் அதற்கு நிகரான பிற சொற்களும் பிறந்ததாகக் கருதப்படுகிறது. அதாவது பிற்காலப் பார்ப்பனியப் பண்பாட்டினால் தீட்டாகக் கருதப்பட்டவர்களே உண்மையில் முதன்மையானவர்கள் என்பதற்கு இதுவும் ஒரு வகையில் சான்றாகிறது. சிந்துவெளி நாகரிகத்தின் மொழியை 'தமிழ்' என்றும் அழைக்கலாம் என்கிற வாதமும் உள்ளது. ஏனென்றால் மகாபாரதத்தில் 'மிலேச்சர்கள்' என்று மொத்தமாக வர்ணிக்கப்படும் போர் நாட்டம் கொண்ட குழுக்களின் பட்டியலில் 'திரமிடர்கள்', இல்லையென்றால் 'திரமிளர்கள்' என்ற பெயரும் இடம் பெற்றுள்ளது. 'தமிழ் / திராவிடம்' என்ற சொல்லாட்சியிலான வேறுபாடு அண்மைக் காலத்தியதே என்று இதிலிருந்து தெரியவரும். என்றாலும், 'திராவிட -- தமிழ்' வேறுபாட்டை நீடித்து வைத்துக் கொள்ள காரணம் உண்டு. ஏனென்றால் திராவிட மொழிகள் இந்தியத் துணைக் கண்டத்தின் மிகப்பெரும் பகுதி எங்கிலும் பரவிக் கிடக்கின்றன. இக்காலத் தமிழ்மொழி மற்ற மொழிகளைக் காட்டிலும் வடமேற்கு இந்தியாவின் தொடக்க கால திராவிடத்திற்கு நெருக்கமானது என்பது உண்மையாகத்தான் இருக்க வேண்டுமென்ற அவசியம் ஒன்றுமில்லை. எது எப்படியானாலும் இந்தத் துணைக் கண்டத்தில் சமஸ்கிருத வழிப்பட்ட மொழிகளைக் காட்டிலும் திராவிட மொழிகள் பழமை வாய்ந்தவை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

ஆனால், இந்துத்துவத் தாசர்கள் இதை ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறார்கள். இந்திய அடையாளம் என்பது அவர்களைப் பொறுத்த வரை சமஸ்கிருதத்தின் தெய்வத் தன்மையை மட்டுமல்லாமல், அதுவே நடுநாயகம், அதுவே முதல் என்பதையும் குறிப்பதாகும். இதனால்தான்

**சமஸ்கிருதம் என்ற மொழியே திராவிட மொழி பேசும் மக்களோடு முரண்பாடு, சண்டை, போராட்டம் என்ற சூழலில்தான் பிறந்தது.**

பரவலாகப் பேசப்படும் சந்தால், முண்டா போன்ற 'ஆதிவாசி மொழிகள்' மொழித் துறையிலோ செய்தி ஊடகத் துறையிலோ கண்டுகொள்ளப்படுவதே அரிதாய் உள்ளது. அதேபோது சமஸ்கிருதமோ கல்விக் கூடங்களில் கற்பிக்கப்படுகிறது, செய்தி ஊடகங்களில் சமஸ்கிருத நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. இவ்வாறு ஒவ்வொன்றை யும் சமஸ்கிருதத்திலிருந்து வருவிக்கும் முயற்சி முரண்பாடு களுக்கு வழிவகுத்துள்ளது. இந்துத்துவத் தாசர்கள் சில நேரம் வேற்றுமையில் ஒற்றுமை தொடர்பான தங்கள் குறிப்பிட்ட விளக்கத்தை நிலைநிறுத்தும் முயற்சியில் தர்க்க முடிச்சுகளில் மாட்டிக் கொள்கிறார்கள். எடுத்துக்காட்டாக 'தெற்கிலி'ருந்து 'வடக்கை' அல்லது 'திராவிட'த்திலிருந்து 'ஆரிய'த்தை பிரிக்கும் முயற்சிகளை வன்மையாகக் கண்டித்துவிட்டு, அதே குரலில் 'ஆரிய -- சமஸ்கிருத' முதன்மையை வலியுறுத்துவது எப்படி? இவ்வாறு வலியுறுத்தப்படும் கருத்து தென்னாட்டவரின் வருத்தத்தை அதிகப்படுத்தத்தானே செய்யும்? மேலும், கருத்துச் சிரத்தையுள்ள அறிஞர்களால் இக்கருத்து எள்ளி நகையாடப்படும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

என்றாலும், சமஸ்கிருதமும் இந்தியப் பண்பாட்டின் ஆரியக் கூறுமே முதன்மையானவை, நடுநாயகமானவை என்று இட்டுக்கட்டி உரிமை கொண்டாடும் வாதங்கள் 'சமயஞ்சார்ந்த' அறிஞர்கள் மீது மட்டுமல்லாமல் 'சமயச் சார்பற்ற' அறிஞர்கள் மீதும் விரிவாகத் தாக்கம் செலுத்தி உள்ளன. எத்தனையோ வட இந்திய அறிஞர்கள்,



படிப்பகம்

www.padippakam.com

முற்போக்காளர்களும் கூட, திராவிட மொழிகளின் முதன்மையை ஏற்றுக் கொள்ளவோ, ஆரியர்கள் வகித்த பங்கின் அழிவுக் கூறுகளுக்கு முகங்கொடுக்கவோ விரும்புவதில்லை.

எடுத்துக்காட்டாக, இந்துத்துவக் கருத்தியலையும் 'ஆரியக் கட்டுக் கதையையும்' மிகத் தெளிவாகக் குற்ற விமர்சனம் செய்கிறவர்களில் ஒருவராக இருந்து வரும் ரொமிலா தாப்பர் **இந்திய வரலாறு** என்ற தனது நூலில் (1999 பெங்குவின் பதிப்பு) சிந்துவெளி நாகரிகத்திற்கு முக்கிய பங்கேதும் தரவில்லை. இந்நூலில் அவர் சிந்துவெளி நாகரிகத்தை இந்திய வரலாற்றின் 'வரலாற்றுக்கு முற்பட்ட' முன்னிகழ்வுகளுக்கு ஒதுக்கித் தள்ளி விடுகிறார். அதன் திராவிட (அல்லது ஆரியமல்லாத) சிறப்பியல்புகளைப் பற்றி அவர் பேசவில்லை. ''நமக்குத் தெரிந்த வரை இந்தியாவின் வளர்ச்சி என்பது ஆரியர் வருகையும் அவர்கள் கொண்டு வந்த பண்பாடும் கொடுத்த உந்துதலிலிருந்து முளை விடுகிறது. ஆனால் இந்திய வரலாற்றுப் போக்கில் தாக்கம் செலுத்திய வேறு பல சக்திகளும் இருக்கத்தான் செய்தன. இவை பல நேரம் ஒன்றுக்கொன்று மாறுபட்டு நின்றவையாகும்'' என்று அவர் சொல்கிறார்.

அப்படியானால் சமஸ்கிருதம்தான் இந்தியப் பண்பாட்டின் 'ஊற்றுக்கண்' என்றும், ஆரியர்கள் 'நம் மூதாதையர்கள்' என்றும் பெரும்பகுதியான இந்திய நாடெங்கும் உள்ள கல்விக் கூடங்களில் படிக்கும் மாணவர்கள் கருதிக் கொண்டே போனால் வியப்பில்லை.

இந்திய நாடெங்குமுள்ள முற்போக்காளர்கள் சமஸ்கிருதமே முதல் என்ற வாதத்தை உறுதியாக மறுத்து அறைகூவல் விடுக்கத் தவறி விட்டார்கள். திராவிட மொழிகளே முதல் என்ற நியாயமான உரிமையை நேர்கொள்ளவும் தவறிவிட்டார்கள். இதனால் இந்திய வரலாறு மற்றும் பண்பாடு தொடர்பான ஒரு மாற்றுப் புரிதலை அடைவது கிட்டத்தட்ட இயலாததாகி விட்டது. இப்படி ஒரு மாற்றுப் புரிதலின் துணைகொண்டுதான் உண்மையிலேயே இந்துத்துவத்தைக் களத்தில் சந்திக்க முடியும். பற்பல வகையிலும் இன அடையாளத்தின் மையக் கருவும், உணர்ச்சியின் வார்ப்பகமும், செய்தித் தொடர்பின் கருவியும் ஆகிய மொழி இன்று இந்திய நாட்டின் திரிபுற்ற அரசியலுக்குக் கீழ்ப்பட்டுக் கிடக்கிறது. ❑

# கவிதைத் தொகுப்பு வெளியீடு

கவிஞர் தாமரையின் 'ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப் பாலும்' கவிதைத் தொகுப்பு நூல் சென்ற நவம்பர் 14 ஞாயிறு மாலை கோவை பீளமேடு பி.எஸ்.ஜி. தொழில் நுட்பக் கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்றது. விஜயா பதிப்பக உரிமையாளர் திரு. மு. வேலாயுதம் வரவேற்புரையாற்றினார். கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் தலைமை வகித்தார். த.த.இ. பொதுச் செயலாளர் தோழர் தியாகு நூலை வெளியிட, திரைப்பட இயக்குநர் சுகாசினி முதல் படியைப் பெற்றுக் கொண்டார். 'மரபின் மைந்தன்' முத்தையா வாழ்த்துரை வழங்கினார். முடிவில் கவிஞர் தாமரை ஏற்புரை நிகழ்த்தினார். இந்தக் கவிதைத் தொகுப்பு நூலை காந்தளகம் வெளியிட்டுள்ளது.

('தாமரை : ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப்பாலும் -- கவிதைத் தொகுப்பு நூல்.
வெளியீடு : காந்தளகம், 834, அண்ணா சாலை, சென்னை -- 600 002. விலை ரூ. 25/-)




*நவம்பர் 30 மரண தண்டனை எதிர்ப்புப் பேரணிக்காக அம்பத்தூரில் தமிழ் தமிழர் இயக்கம் (திருவள்ளூர் மாவட்டம்) செய்துள்ள சுவரெழுத்துப் பரப்புரை*



படிப்பகம்

www.padippakam.com

# சங்க காலம் கண்ட வீரம்



சங்கெடுத்து முழங்குவோம் முரசெடுத்துக் கொட்டுவோம்!
சங்க காலம் கண்ட வீரம் இன்று காணு தெங்கள் ஈழம்!

*

குமரிதொட்டு இமயம் வரையில் வீரம் படைத்த தமிழா -- நீ
குறுகிக் கூனி இமைகள் மூடி கிடப்பதென்ன முறையா?
தமிழனென்றும் அடிமையாக வாழ்ந்த காலம் உண்டா -- பண்டு
தமிழனிடம் தோல்வி கண்ட பகைகள் ஒன்றி ரண்டா?

*

தூக்குமேடை கழுமரத்தைத் தூசியாகக் கண்டான் -- தமிழன்
துடித்து உயிர் போகையிலும் அடிவிழுந்தும் பணியான்!
படிகளேறி பதவிகேட்டும் கப்பம் கேட்டும் அறியான் -- தேச
விடியலுக்காய் தமிழனன்று உயிரைத் தியாகம் செய்தான்!

அந்த வழியில் வந்த மறத் தமிழன் அல்லவா -- நாம்
சொந்த மண்ணை மீண்டு மாள வேண்டும் அல்லவா?
வீரம்படைத்த பெண்களும் அந்தக் காலம் உண்டு -- பிர
பாகரனின் படைகளிலே பெண்புலிகளாய் இன்று!

எதிரிகளோ தோல்விகளை அடுக்கடுக்காய்க் குவிக்கிறார் -- புலி
ஏடுகளில் சகலத்தையும் சரித்திரமாய் பொறிக்கிறார்!
புதைந்து மறைந்து போன அந்த வீரத் தமிழன் சரிதம் -- மீண்டும்
புலிகளாலே ஈழமண்ணில் படைப்பதகிலம் அறியும்!


- கோ. திருநாமம், யாழ் - பருத்தி நகர்.




சேலம் மாவட்டம் மேச்சேரி பேருந்து நிலையத்தில் வைத்துள்ள பெரிய விளம்பரத் தட்டி

படிப்பகம்

www.padippakam.com



இள மொட்டுகள் கருகிட
நேரம் குறித்தொரு
ஆணை பிறந்திடுமோ?

கை கட்டியே நின்றதை
கண்கவர் கூத்தென
கண்டு களிப்பதுவோ?

நம் கைகள் கோத்தொரு
தீத்தழல் கொண்டதை
எரித்திட வேண்டாமோ?

நாம் தமிழன் பூமியில்
தமிழன் பேர்தனில்
பிறந்தது வீண்போமோ?

— தாமரை

ஓவியம் : இரா. தியாகு

**1999 நவம்பர் 30**
**செவ்வாய் காலை 10 மணி அளவில்**
**சென்னை, அண்ணா சாலை,**
**அண்ணா சிலை அருகிலிருந்து... கோட்டையை நோக்கி...**

# மரண தண்டனை எதிர்ப்பு மனித உரிமைப் பேரணி!

*வாருங்கள் தமிழர்களே!*

படிப்பகம்